விலை ரூபா 1-00

வகுப்பு
G.C.E.A/L
தூய பிரயோக கணித
வகுப்புக்கள்
நடைபெறுகின்றன.
ஆசிரியர் ரவிமோகன்
மணியம்ஸ் பில்டிங்
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
(ஸ்ரீதர் சினிமா-நாகவிகாரைக்கு
இடையில் அமைந்துள்ளது.)
3357

# ஈழநாடு

THE EELANADU

இலங்கை
இளங்கலைஞர் மன்ற
வருடாந்த இசைப்போட்டி 1982
விண்ணப்ப முடிவு திகதி
30 6-82
விபரங்களுக்கு:
மு. இராமலிங்கம்
செயலாளர்
109, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம். 3370

மலர் 24 வைகாசி 16 ஷ‍ீபா 6 இதழ் 106
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 30—5—82

# ஆயுதம் வாங்க பணத்துக்காக வங்கிக் கொள்ளை நடத்தினேம்!

## பொலிஸ் நிலையங்களைத் தாக்கியும் ஆயுதம் பெற்றேம்

### பிரபா, உமா குழு விசாரணையில் கூறியதாம்

(சென்னை)

**இலங்கையில் வாழும் தமிழ்மக்களை அங்கு வாழும் மற்ெருரு இனமக்கள் துன்புறுத்திவருவதனுலேயே நாம் தீவிரவாதிகளாக மாறி தீவிர நடவடிக்கைளில் .ஒரு நிர்ப்பந்தத்தின் க ரணமாக ஈடுபட்டோம் எமது நடவடிக்கைகளுக்காகவும் எமது தற்பாதுகாப்புக்காகவும் எமக்கு ஆயுதங்கள் தேவைப்பட்டன. அந்த ஆயுதங்களைப் பெறுவதற்காக பொலிஸ்நிலையங்களைத் தாக்கினேம். மேலும் ஆயுதங்க'ள வாங்கு வதற்கு எமக்குத்தேவையான பணத்தைப் பெறும்பொருட்டு வங்கிகளைக் கொள்ளையடித்தோம்.**

அண்மையில் தமிழகத்தில் கைதான பிரபாகரன், உமா மகேஸ்வரன் உட்பட ஐந்து இளைஞர்களும் தமிழகப் பொலிசாரிடம் மேற்கண்டவாறு தெரிவித்தாக சென்னையிலிருந்து கிடைக்கப்பெற்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

தமிழ்ஈழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவர்கள் என்று கருதப்படும் உமா மகேஸ்வரன், பிரபாகரன் ஆகியோரையும் நிரஞ்சன், சோதீஸ்வரன், சிவகுமார் ஆகியோரையும் தமிழகப் பொலிசார் விசாரணை செய்கையிலேயே மேற்கண்டவாறு அவர்க்ள் தெரிவித்தனராம்.

### இராணுவ பயிற்சி

எமது இயக்கம் மி வும் கட்டுப்பாடுடையது.

எமது உறுப்பினர்கள் ஒரு நாளைக்கு இரு தடவைகள் தான் சாப்பிடுவோம்.

நாம் இராணுவப் பயிற்சியும் பெற்றுள்ளோம்.

எமக்கு சல வாகனங்களையும் செலுத்தத் தெரியும்.

மேற்கண்ட தகவல்களையும் அந்த இளைஞர்கள் தமிழக பொலிசாரிடம் தெரிவித்தனராம்.

### பாதுகாப்புகருதி வெளியிட மறுப்பு

இதே வேளையில் இந்த இளைஞர்களிடமிருந்து கிடைக்கப் பெற்ற பலதகவல்களை பாதுகாப்பு கருதி தம்மால் வெளியிடமுடியவில்லை என்று பொலிசார் தெரிவித்துள்ளனர்.

### தமிழக வழக்கறிஞர்கள் கோரிக்கை

இது இவ்வாறிருக்க இலங்கையில் இடம்பெற்ற வன்செயல் சம்பவங்கள் தொடர்பாக அண்மையில் தமிழகத்தில் கைதான இலங்கை இளைஞர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளும் ஈடுபாடுகுறித்துதெரிவிக்கப்பட்டவைகளும் பொய்யானவைஎன தமிழகவழக்கறிஞர்கள்குழு ஒன்றுமத்திய வெளிநாட்டு அமைச்சர் திரு நரசிம்மராவுக்கும் தமிழக பிரதம செயலாளர் திரு.கே, திரவியத்திற்கும் அனுப்பி வைத்துள்ள மகஜர் ஒன்றில் தெரிவித்துள்ளனர்.

இந்த இளைஞர்களை இலங்கையிடம் கையளிக்கக்கூடாது என்றும் அவர்கள் தமது மகஜரில் கேட்டுள்ளனர்.

### விசாரணையின் பின்பே இலங்கை அரசு இளைஞர்களை இந்தியாவிடம் கோரும்

இந்திய மத்திய அரசின் அனுமதியின்பேரில் தமிழகத்தில் கைதான இலங்கைத் தமிழ் இளைஞர்கள் மீது இலங்கைப் பொலிஸ் மா அதிபர் திரு. ருத்திரா ராசசிங்கம் தலைமையிலான உயர் பொலிஸ் கோஷ்டி உயர்மட்ட விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது.

இன்று ஞாயிற்றுக்கிழமை அல்லது நாளை திரு. ராஜசிங்கம் இலங்கை திரும்புவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது இவ்வாறிருக்க இலங்கைக்குப் இந்தியாவுக்கும் இடையே இரு நாட்டுக் குற்றவாளிகளைக் கையளிப்பது தொடர்பாக எதுவித ஒப்பந்தமும் இதுவரை செய்யப்படாதினுல் தமிழகத்தில் கைதான இளைஞர்களை இலங்கைக்குக் கொண்டு வருவதில் இலங்கை அரசு பெரும் சிக்கலை எதிர்நோக்கவேண்டி இருக்கிறது எனக் கூறப்படுகிறது.

எனினும் 5 இளைஞர்கள் மீதான விசாரணைகளும் முடிவுற்ற பின்னரே இவர்களைத் தம்மிடம் ஒப்படைககுமாறு இலங்கை கோரிக்கை விடுக்கும் என கொழும்பில் உயர்அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

### சன்மானம் மக்களுக்கா – பொலிசாருக்கா?

பிரபாகரன், உமா மகேஸ்வரன் கோஷ்டியினரைக் கைது செய்தமைக்காக இலங்கை அரசு அறிவித்துள்ள 10 லட்சம் ரூபா சன்மானத்தைப் பெறுவதற்காக தமிழக பொலிசாருக்கும் பொதுமக்களுக்குமிடையே இழுபறி ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

கைதான இளைஞர்களைத் தாமே முதலில் பிடித்ததாக பொலிசாரும் பொதுமக்களும் கூறிவருவதால் மத்திய அரசுடன் ஆலோசனை நடத்திய பின்னரே இச்சன்மானம் வழங்கப்படும் எனக் கூறப்படுகிறது. (ம-இ)

---

பரிசோதனையின் எதிரொலி?

## சுங்க உத்தியோகத்தர் உட்பட 9 பேர் ஆஸ்பத்திரியில்

(யாழ்ப்பாணம்)

யாழ். சுங்கப் பகுதியைச் சேர்ந்த குழுவினருக்கும் மண்டைதீவைச் சேர்ந்த ஒரு குழுவினருக்கும் இடையே இடம் பெற்ற மோதலை அடுத்து ஐந்து சுங்கப்பகுதி அதிகாரிகளும் மற்றும் நால் வரும் யாழ். ஆஸ்பத்திரியில்

(8ம் பக்கம் பார்க்க)

யாழ். வங்கியில் ரூ. 100 கள்ளநோட்டு?

## இரகசிய பொலிஸ் குழு

### விசாரணை நடத்த யாழ். வருகிறது

யாழ்ப்பாணம்)

யாழ். இலங்கை வங்கி பிரதான கிளையிலிருந்து பாவனையாளர்கள் இருவருக்கு 8,900 ரூபா கள்ள நோட்டுக்கள் வழங்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் குறித்து விசாரணை செய்வதற்கு விசேட இரகசியப் பொலிஸ் குழு ஒன்று கொழும்பிலிருந்து வருகிறது.

இக் குழுவினர் நாளை இங்கு விசாரணைகளை நடாத்துவர்.

சாவிளானைச் சேர்ந்த ஒருவர் 100 ரூபா கள்ள நோட்டுக்கள் கொண்ட 4,400 ரூபாவை மேற்படி வங்கிக் கிளை தமக்கு தந்ததாக பணம் பெற்று சுமார் ஒரு வாரத்திற்குப்பின் வங்கியில் புகார் செய்துள்ளாராம்.

இதேபோன்று 3,500 ரூபா கள்ள நோட்டுக்களை இதேகிளை தமக்குத் தந்தவாக மற்ெருருவரும்வங்கியில் புகார்செய்துள்ளார்.

இது இவ்வாறிருக்க புதிய 100ரூபா நோட்டுகளின் புளக்கத்தைக் குறைத்துக் கொள்ளுமாறும் இந்நோட்டுக்களை அவ

(7-ம் பக்கம் பார்க்க]

---

ஈழ விடுதலைப்புலி இயக்க வாலிபர்களை

## இலங்கையிடம் ஒப்படைத்தால்

### தமிழ் மக்களுக்கு மேலும் நெருக்கடி ஏற்படும்

### தி. மு. க. தலைவர் கருணுநிதி எச்சரிக்கை

(சென்னை)

சென்னையில் கைதான ஈழ விடுதலைப்புலி இயக்க வாலிபர்களை இந்தியப் பொலிசார் இலங்கைப் பொலிசாரிடம் ஒப்படைக்கக் கூடாது. அவ்வாறு ஒப்படைக்கும் பட்சத்தில் இலங்கைத்தீவின் தமிழ் மக்களின் நிலைமையில் மேலும் பல நெருக்கடிகள் ஏற்படும்.

இவ்வாறு தி மு க தலைவரும் தமிழக சட்ட சபையின் எதிர்க்கட்சித் தலைவருமான திரு. மு. கருணுநிதி தெரிவித்துள்ளார்.

திரு. கருணுநிதி பத்திரிகையாளர்களிடம் மேலும் கூறியதாவது:

கைதான வாலிபர்கள் குற்றச் செயல்கள் புரிந்திருந்தால் அவர்கள் மீது பொலிசார் சட்ட நடவடிக்கை எடுக்கலாம் நாம் அதனை ஆட்சேபிக்கவில்லை.

இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக இருக்கும் தி.மு.க. வினரதும் மற்றும் அரசியல்கட்சியைச் சேர்ந்தவர்களினதும் இல்லங்களை பொலிசார் சோதனையிடுவதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். (மா-இ)

---

### மாநகரசபைக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றமாதாந்தபொதுகூட்டம் நாளை திங்கட்கிழமை பிற்பகல் மாநகரமுதல்வர் திரு. இராஜா விசுவநாதன் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

## விற்பனைக்கு

சிங்கின் டெமி சைஸ் சிலிண்ர் மெசின் ஒன்றும், ஒரு பத்திரிகை பிரசுரிக்கத் தக்கதான எழுத்துக்களும் விற்பனைக்குண்டு. ஞாயிறு நேரில் வரவும். தாரணி அச்சகம், 37, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 3366

கலர் ரி வி. சொனி 20 (மொடல் இல. K V. 2020 E) விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: சமுத்திரா ரேட்ஸ், 23/2, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 3363

யாழ். இந்து மகளிர் கல்லூரி, இந்துக்கல்லூரி, ஆகியவற்றிற்கு அண்மையில் பிறவுண் வீதி இரண்டாவது ஒழுங்கையில் வீடுகட்டுவதற்கேற்ற காணித்துண்டு விற்பனைக்குண்டு. அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும். மக்கள் பிரசுராலயம் லிமிட்டெட், 40, சிவன் கோவில் வடக்கு வீதி, யாழ்ப்பாணம். 3375

யாழ் பல்கலைக் கழகத்திற்கும் கொக்குவில் புகையிரத நிலையத்திற்கும் மிக அருகாமையில் உள்ள 2 பரப்புக் காணி உடனடியாக விற்பனைக்குண்டு நேரில் தொடர்பு கொள்க: ச. கனகரத்தினம், முதலி கோவில் ஒழுங்கை, கொக்குவில் மேற்கு, கொக்குவில். கொழும்பில் தொடர்பு கொள்ள தொலைபேசி இலக்கம்: 715123. 3376

கைதடி ஆயுள்வேதக் கல்லூரி முன்பாக உள்ள ஒழுங்கையில் ''கூளாவடிப்பிட்டி வயல்'' என அழைக்கப்படும் பத்துப்பரப்பு வயல்காணி விற்பனைக்குண்டு. விலைபற்றிய விபரங்கட்கு தொடர்பு கொள்க: ஞா. சிங்கருயர், ''தணிகை'' செம்பியன் ஒழுங்கை, கொக்குவில். 3350

இறக்குமதி செய்யப்பட்ட புதிய அமெரிக்கன் கெல்வினேற்ற Kelvanator) இரண்டு கதவுள்ள குளிர்சாதனப் பெட்டியொன்று விற்பனைக்குண்டு. செ. சித்ரராஜா, வேப்படி ஒழுங்கை, வல்வெட்டித்துறை. 3352

நல்ல முறையில் பாவித்த 22ஸ்ரீ டீசல் ஒஸ்ரின் லொறி (Full Body) உடனடியாக விற்பனைக்குண்டு. விபரம் புன்னாலைகட்டுவன் பெற்றோல் செட்டில் பெறலாம். 3368

யாழ்ப்பாணம் இராசாவின் தோட்ட வீதியில் கைலாசபிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் ஒன்றரைப்பரப்பு வெறுங்காணி விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு கலா ஜோதி மில், 51/10, மானிப்பாய் றோட், யாழ்ப்பாணம். 3372

நல்லூர் கோவிலுக்கு அண்மையில் 1¾ பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: மல்ரி சேவிசஸ், த டன்லப் ஸ்ரோர்ஸ், 234, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3337

### பாடசாலைக் கட்டிடம் அமைத்தல்

கட்டிட ஒப்பந்தகாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விபரங்களுக்கு:- மருதனமடத்தில் உள்ள யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவன அதிபருடன் தொடர்புகொள்ளவும்.

3335

# வரி விளம்பரம்

## தேவை

கன்னியர் மடம் ஒன்றுக்கு சமையல் வேலை செய்வதற்கு நடுத்தர வயதுப் பெண்மணி தேவை. உடன் விண்ணப்பிக்க. விளம்பர இல: 3381, மே/பா. ஈழநாடு, யாழ்ப்பாணம். 3381

35 M. M. கமரா தேவை. விபரங்களுடன் தொடர்பு கொள்க. போட்டோ இலங்கேஸ், 42 பலாலி வீதி, யாழ்ப்பாணம் 3362

இணுவிலில் அமைந்திருக்கும் நவீன வசதிகள்கொண்ட ''காமென்ட்ஸ்'' தொழிற்சாலைக்கு பல அனுபவமுள்ள பெண்கள் தேவை. முன்னர் காமென்ட்ஸ் தொழிற்சாலைகளில் வேலை செய்தவர்க்கு முன்னுரிமை வழங்கப்படும். நேரில் வரவும். சாந்தா காமென்ட்ஸ் இராஸ்ஹொட், கே கே. எஸ். வீதி. மருதனமடம் சந்தி அருகில், இணுவில். 3290

## பதவி வெற்றிடம்

### தற்காலிக மின் இணைப்பாளர், ஒட்டுநர்.
(Electrician, Cum Welder)

மின் இணைப்பாளர் ஒட்டுநர் (Electrician Cum Welder) பதவி சங்கத்தில் தற்காலிக வெற்றிடமாகவுள்ளது. பின் வரும் தகமை/அனுபவமுடையோர் தமது விண்ணப்பங்களை 15-6-82 திகதிக்கு முன் பதிவுத் தபால் மூலம் சங்கத்தின் பொதுமுகாமையாளருக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

தகமை:-

அ. க பொ. த. (சாதாரண தரம்) கணிதம்/எண்கணிதம், பௌதிகவியல் உட்பட ஆறு பாடங்களில் பெற்ற சித்தியுடன் இப்பதவிகளில் பெற்றுள்ள ஐந்துவருட அனுபவம்.

ஆ. மின்சாரத் தொழிலிலும் ஒட்டுநர் (Welding) தொழிலிலும் பெற்றுள்ள விசேட தகமைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

சம்பளம்:-

600—1000 ................ 40×10 — உரிய அரச படிகளும்

வயது:- 25 — 40

பொதுமுகாமையாளர்,
பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ. சங்கம்,
பண்டத்தரிப்பு

30-05-1982. (3361

## தேவை

தராதரப்பத்திரம் உள்ள தையல் ஆசிரியைக்கு விண்ணப்பங்கள்கோரப்படுகின்றன. தராதரம் உடையவர் பூரண விபரத்துடன் கீழ்க் குறிப்பிடும் முகவரிக்கு 5-6-82க்கு முன் விண்ணப்பிக்கவும்.

பொதுமுகாமையாளர்,
நல்லூர் ப.நோ கூ சங்கம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

3377

## சோதிடம்

வெளிநாடு செல்லுதல், திருமணம், கல்வி, உத்தியோகம் முதலியன குறிப்புடன் ரூபா 10/- அனுப்புக. கே. எல். எம். கிருஷ்ணபிள்ளை ஸ்ரீ பராசக்தி சோதிட நிலையம், 87, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம். 3212

## சேவை

உங்களுக்கு தீராத நோய் எதுவானாலும் எங்களுடன் தொடர்புகொள்ளவும். குறைந்த செலவில் துரித பலன் பெற நாடுங்கள். தம்பையா வைத்தியசாலை, வடலியடைப்பு (P. W. D. டிப்போவுக்கு எதிரில்) பண்டத்தரிப்பு. 3367

### காரைநகர் ப. நோ. கூ. சங்கம்

## வெற்றுச் சாக்கு கேள்விப் பத்திரம் அறிவித்தல்

1900 வெற்றுச்சாக்குகள் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்குண்டு. 9-6-82 புதன்கிழமை நண்பகல் 12-00 மணிவரை கேள்விப்பத்திர விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். மீளப் பெறும் வைப்புப் பணமாக ரூபா 250/-உம் செலுத்த வேண்டும். நிபந்தனைகளையும் விபரங்களையும் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம். கேள்விப் பத்திரங்கள் யாவும் தலைவர், ப. நோ. கூ. சங்கம் காரைநகர் என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். இக் கேள்விப்பத்திரம் சங்கத்தால் நிராகரிப்பதற்கு உரிமையுண்டு.

குறிப்பு:

காரியாலயத்தில் ரூபா 2/- செலுத்தி கேள்விப் பத்திரம் பெற்றுக்கொள்ளலாம்.

தலைவர்.
ப. நோ. கூ. சங்கம்,
காரைநகர்

82.5.27.

3360

## லொறி விற்பனை 24 ஸ்ரீ 958

மாந்தை தெற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான நல்ல நிலையில் உள்ள 24ஸ்ரீ 958 இசுசு லொறி விற்பனைக்கானமுத்திரையிடப்பட்ட கேள்விகள் 12-6-82 நண்பகல் 12 மணிவரை எங்களால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விக்காரர் மீளப்பெறக் கூடிய வைப்புப் பணமாக ரூபா 100/-மும் கேள்விப் பத்திரப் பணம் ரூபா 25/-உம் செலுத்தவேண்டும்.

கேள்விப பத்திரங்கள் 11-6-82 வரை பெற்றுக்கொள்ளலாம் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் நாளிலிருந்து ஒரு வார காலத்திற்குள் தகுதி பெறுவோர் முழுத்தொகையும் செலுத்தி வாகனத்தைச் சங்க வளவிலிருந்து எடுத்துச் செல்லலாம். அக் கேள்விப் பத்திரங்கள் பதிவுத்தபாலில் கீழ்க் கையொப்பமிடுபவருக்கு அனுப்பவேண்டும். தபால் உறையில் இடதுபக்க மூலையில் ''லொறி விற்பனைக்கான கேள்வி'' எனத் தெளிவாகக் குறிப்பிடவேண்டும். வாகனத்தைப் பார்வையிட விரும்புவோர் வேலைநாட்களில் சங்கத்தில் பார்வையிடலாம்.

P. S. சவிரி
பொதுமுகாமையாளர்,
மாந்தை தெற்கு
ப. நோ. கூ. சங்கம்,
உயிலங்குளம்.

3369

## பயிற்சி

ஒரு மாத எலக்ரிக்கல் வயரிங் டிப்பிளோமா பயிற்சி, ஒரு மாத வெல்டிங் டிப்பிளோமா பயிற்சி 02-06-82 ஆரம்பமாகின்றன. இன்ஸ்ரிரியூட் ஒவ் என்ஜினியரிங் ரெக்னொலொஜி, 9 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 3344

## வாடகைக்கு

பெரியகடை சூழலில் 4 அறைகள், வியாபாரிகள் பாவிப்பதற்கோ, டியூட்டறிகளுக்கோ அல்லது உத்தியோகத்தர் (தனி ஆண்கள்) தங்குவதற்கோ ஏற்றது. விபரம்: 142, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 3379

## வாடகைக்கு

நாவலர் வீதி, கனகரத்தினம் வீதிச் சந்தியில் மின்சார வசதியுள்ள பெரிய வீடு உடனடியாக வாடகைக்கு கொடுக்கப்படும். தொடர்பு: பழைய எண்: 449, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 3304

பெரியாஸ்பத்திரி, பெரிய கடை, பெரிய இந்துக்கல்லூரிகள் மத்தியில் நவீன வசதியுடன் தராதரமான அழகிய வீடுகள் சிறிய குடும்பத்திற்கு டாக்டர் போன்ற உத்தியோகஸ்தர்கட்கு ஏற்றது. பெண் ஆசிரியை போன்ற இரு பெண்கள் சீவிப்பதற்கும் பாதுகாப்பானது. 19, கடைச்சாமி வீதி, நீராவியடி, நாவலர் வீதிக்கப்பால், யாழ்ப்பாணம். 3378

## ஏலவிற்பனை

வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தில் 5-6-82 சனிக்கிழமை மு.ப. 10 மணியளவில் மாடுகள் ஏலத்தில் விற்கப்படும். கல்லூரிநாட்களில் விபரம் அறிய விரும்புவோர் அறிந்துகொள்ளலாம்.

அதிபர்
யா/வயாவிளான்
மத்திய மகாவித்தியாலயம்

3358

## முக்கிய அறிவித்தல்

### அருள்மிகு ஸ்ரீ நகுலாம்பிகா தேவி நகுலேஸ்வர ஆலயம்

சிவநேயச்செல்வர்களே!

மேற்படி ஆலய இராஜகோபுர திருப்பணி வேலைகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றது.

சந்தர்ப்பத்தை பயன்படுத்தி சில ஏமாற்றுப் பேர்வழிகள் பணம் சேகரிப்பதாக அறியவருகிறது. ஆனபடியால் பொதுமக்கள் மேற்படி ஆலயத்திற்காக பணம் சேகரித்தவரையோ அல்லது சேகரிக்கவருபவரையோ உடனடியாக பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இராஜகோபுர திருப்பணிக்கு பணம் கொடுக்கவிரும்பும் அடியார்கள் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்பி பற்றுச்சீட்டு பெற்றுக்கொள்ளவும்.

விலாசம்:

கு. நகுலேஸ்வரக்குருக்கள்
ஆதீனகர்த்தா
நகுலேஸ்வர ஆலயம்
கீரிமலை, காங்கேசன்துறை.

3340

## விளம்பரம்

### சிறுகைத்தொழிற் பகுதி கச்சேரி, யாழ்ப்பாணம்.

## பதவி வெற்றிடங்கள்

1. தும்புவேலை செயல்முறை காட்டுநர்
2. மட்பாண்ட செயல்முறை காட்டுநர்
3. பன்னவேலை செயல்முறை காட்டுநர்
4. மரவேலைப் பயிற்சியாளர்கள்

மரவேலைப் பயிற்சிக்குரிய காலஎல்லை ஒருவருடம்
வயது: 14 முதல் 30 வரை

வேதனம்: ஒருநாளுக்கு 5 ரூபாவும் உற்பத்திலாபத்தின் 8) வீதமும்

மரவேலைப்பயிற்சி நிலையங்கள்: யாழ்ப்பாணம், மானிப்பாய், சுண்ணாகம், கோணாவில், கிளிநொச்சி.

கல்வி: குறைந்தது 5-ம் வகுப்பில் சித்தி

பயன்: சித்தியெய்தியோருக்கு டிப்ளோமா சான்றிதழ் சித்தியெய்தாதோருக்கு செய்முறைச் சான்றிதழ் வழங்கப்படும்.

சகல செயல்முறை காட்டுநருக்கான விண்ணப்பங்களையும் மரவேலைப்பயிற்சிக்கான விண்ணப்பங்களையும் 15-6-82க்கு முன் உதவி அதிபர், சிறுகைத்தொழிற் கிளை கச்சேரி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். நேர்முகப்பரீட்சை பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

உதவி அதிபர்
சிறுகைத்தொழிற் பகுதி,
கச்சேரி, யாழ்ப்பாணம்.

3371

# "மனித குலத்தை அழிக்கும் போரை நிறுத்துங்கள்"

## பாப்பரசர் லண்டனில் விடுத்துள்ள உருக்கமான வேண்டுகோள்

லண்டன், மே. 29

பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் லண்டன் விஜயத்தை மேற்கொண்டு நேற்று விமானமூலம் இங்கு வந்து சேர்ந்தார். விமான நிலையத்தில் இறங்கியதும் முழந்தாளிட்டு நிலத்தை முத்தமிட்டார்.

தனது பிரிட்டன் விஜயம் சமாதானத்தையும் அமைதியையும் வலியுறுத்துவதாக பாப்பரசர் தெரிவித்தார். 48 மணித்தியாலங்களிற்கு முன்னரே இவரது விஜயம் ஊர்ஜிதப்படுத்தப்பட்டது.

விமானநிலையத்தில் பல்லாயிரக்கணக்கான கத்தோலிக்க மக்கள் குழுமியிருந்தனர்.

விமானம் தரையில் இறங்கியதும் மாணவர்கள் வெள்ளை மஞ்சள் நிறங் கொண்ட கொடிகளை அசைத்து பாப்பரசரை வரவேற்றனர். பிரிட்டனுக்கு விஜயம் செய்யும் முதலாவது பாப்பரசர் இவராவர். இவரது விஜயம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

மனிதகுலத்தை அழிக்கும் யுத்தத்தை நிறுத்தும் படி பிரிட்டனுக்கும் ஆர்ஜென்டீனுவுக்கும் நேற்று லண்டன் வெஸ்ட் மினிஸ்டர் தேவாலய ஆராதனையின்போது வேண்டுகோள் விடுத்தார்.

இன்று லண்டன் சவுத்வாக்ரில் நோய்வாய்ப்பட்டவர்களுக்காக பாப்பரசர் ஆராதனை நடாத்தினுர் கன்டபறி தேவாலயத்தில் இன்று சனிக்கிழமை பாப்பரசரை இளவரசர் சாள்ஸ் சந்திக்க உள்ளார்.

இதே சமயம் ஆர்ஜென்டீனு போக்லண்டிலிருந்து வெளியேறினுல் மாத்திரமே போர் நிறுத்தம் சாத்தியமாகும் என பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மாக்கிரட் தட்சர் ஏற்கனவே திட்டவட்டமாக கருத்து வெளியிட்டுள்ளார்.

பிரிட்டிஷ் பிரதமரின் இக் கருத்து பாப்பரசரை மனவேதனைக்குள்ளாக்கியிருப்பதாகக் கூறப்படுகின்றது.

போக்லண்டில் இறங்கியுள்ள பிரிட்டிஷ் படைகள் மேலும் பல நிலைகளைத் தன்வசப்படுத்தியிருப்பதாக அறிவித்துள்ளது. அதேசமயம் பிரிட்டிஷ் படைகளுக்கு கடுமையான சேதங்களை ஏற்படுத்தி வருவதாக ஆர்ஜன்டீனு அறிவித்துள்ளது. [கு]

## 301 பேர் கைது!

சென்னை, மே 29

அண்மையில் கன்யாகுமரி மாவட்டத்தில் இடம்பெற்ற கலவரங்கள் தொடர்பாக இதுவரை 301 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் பலர்தேடப்படுவதாகவும் நாகர்கோவிலில் கன்யாகுமரி மாவட்ட கலெக்டர் தெரிவித்தார், (கு)

## 'ஷெபீல்ட்' சிப்பந்திகள்: நாடு திரும்பினர்

லண்டன், மே 29

ஆர்ஜன்டீனுவினுல் மூழ்கடிக்கப்பட்ட பிரிட்டிஷ் நாசகாரிக் கப்பலான ஷெபீல்ட்லிருந்து உயிர்தப்பிய கடற்படைவீரர்கள் நேற்றுமுன்தினம் லண்டன் வந்து சேர்ந்தனர்.

ஷெபீல்ட் கப்டன் தலைமையில் 20 வீரர்களும், 20 காயமடைந்தவர்களும் ரேயல் விமானப்படை விமானம் மூலம் லண்டன் வந்தடைந்தபோது விமான நிலையத்தில் வைத்து கடற்படை உயர் அதிகாரிகளும், உறவினர்களும், நண்பர்களும் ஆரத் தழுவி அவர்களை வரவேற்றனர்.

ஷெபீல்ட் கப்டன் விமான நிலையத்தில் பத்திரிகையாளர்களுக்குப் பேட்டியளிக்கையில், "கடந்த நவம்பர் 17ல் புறப்பட்ட நாம் மிகவும் உறுதியாகவே யிருந்துவந்தோம்.

இம்மாத முதல் பகுதியில் எமது கப்பலான ஷெபீல்ட்—நாசகாரி சூரிய உதயம் நடைபெற்ற ஒரு சில மணித்தியாலங்களிலேயே தாக்குதலுக்குள்ளானது.

மிகவும் தாழப்பறந்துவந்த இரு ஆர்ஜன்டீனு ஜெட் விமானங்கள் தூரத்திலிருந்து 'எக்ஸோ செட்' என்ற பிரெஞ்சுத் தயாரிப்பு ஏவுகணைமூலமே எமது கப்பலைத் தகர்த்தன. இத்தாக்குதல்பற்றியமுன்னறிவித்தல் மிகவும் குறுகியநேரத்திலேயே எமக்குக்கிடைத்தது. தாக்குதலுக்குள்ளான எமது கப்பல் மூன்றுதினங்கள் எரிந்த பின்பே முற்றுக மூழ்கியது என்றுர்.

மேலும் ஷெபீல்ட் கப்டன் நா தழுத முத்தவராய், 'ஷெபீல்ட்' கப்பலில் உயிர் நீத்தவர்களின் குடும்பங்களுக்குத் தமது அனுதாபத்தைத் தெரிவித்ததுடன், நாடு திரும்பியது குறித்து நிம்மதியடையும் அதேவேளை சகாக்கள் சிலரை இழந்திருப்பதையிட்டும் தாம்நேசித்த ஷெபீல்டை நினைத்தும் கலங்குவதாகத் தெரிவித்தார். (கி)

## விபத்தில் இறந்த குடும்பங்களுக்கு நஷ்டஈடு

சென்னை, மே 29

கிமாச்சலப் பிரதேசத்தில் வெளிபுறப் படத் தயாரிப்புக்

(6-ம் பக்கம் பார்க்க)

# கிழக்கு போக்லண்டில் இரு துறைமுகங்கள் வீழ்ச்சி!

## பிரி. வீரர்களை துரத்தியடித்ததாக ஆர்ஜன்டீனு மார்தட்டுகிறது

லன்டன் மே, 29.

கிழக்கு போக்லண்டிலுள்ள கூட்கிறீன், டார்வின் ஆகிய துறைமுகங்களை பிரிட்டிஷ் படைகள் கைப்பற்றியுள்ளதாகவும் இதற்கு பிரிட்டிஷ் வான்குடைப் படைப்பிரிவினர் பெரிதும் உதவியதாக பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சு இன்று அறிவித்துள்ளது.

போக்லண்டின் தலைநகரான போட்ஸ்ரான்லிப் பகுதியில் உள்ள ஆர்ஜென்டீனு நிலைகள் மீது உக்கிரமான தாக்குதலில் ஈடுபட்ட பிரிட்டிஷ் விமானப் படை, கடற்படைத் துருப்புக்கள் பல ஆர்ஜென்டீனு படைவீரர்களை கைது செய்தாலும் பல ஆர்ஜென்டீனு வீரர்கள் கொல்லப்பட்டதாகவும் பிரிட்டன் அறிவித்துள்ளது.

இதே வேளை இக் கூற்றை மறுத்த ஆர்ஜென்டீனு தாம் பிரிட்டிஸ் படைகளை போட்ஸ்ரான்லியில் இருந்து விரட்டியடித்ததாகவும், பிரிட்டிஸ் படைகள் தமது நிலைகளை கைவிட்டு பின் வாங்குவதாகவும் ஆர்ஜென்டீனு அறிவித்துள்ளது.

ஆர்ஜென்டீனு படைகள் போக்லண்டில் இருந்து பின் வாங்கும்வரை பிரிட்டன் தாக்குதலில் ஈடுபடும் என பிரதமர் தட்சர் அறிவித்துள்ளார்.

### யு. எஸ். உதவிக்கு எதிர்ப்பு

இதேசமயம், போக்லண்ட் பிரச்னையில் பிரிட்டனுக்கு அமெரிக்கா ஆதரவளிப்பதை நிறுத்தவேண்டும் என்று லத்தீன் அமெரிக்க நாடுகளின், வெளிவிவகார அமைச்சர்கள் அமெரிக்காவை கோரவிருக்கிறுர்கள்.

அமெரிக்கா வெளிவிவகார அமைச்சர் திரு. அலெக்ஸாண்டர் ஹெய்க், போக்லண்ட் பிரச்னைக்கு ஆர்ஜெண்டீனு தான் காரணம் என்றும், அதனுல் லத்தீன் அமெரிக்க நாடுகள் செய்துகொண்ட ஒப்பந்தத்தை அமுல் நடத்துமாறு கோருவது நியாயமில்லை என்றும்தெரிவித்தஅவர்பிரிட்டனுக்கு அமெரிக்கா ஏவுகணைகளையும் யுத்த ஆயுதங்களையும் வழங்குகின்றது என்ற குற்றச்சாட்டை மறுத்தார்.

உதவியளிக்கக்கோரும் தீர்மானத்திற்கு 17 லத்தீன் அமெரிக்க நாடுகள் ஆதரித்து வாக்களித்தன அமெரிக்கா உட்பட 3 நாடுகள் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை.

புதிய பிரேரணைக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற ஆர்ஜெண்டீனுவுக்கு கஷ்டமாக இருக்கும் எனக் கூறப்படுகிறது.

ஐ. நா. பாதுகாப்பு சபை புதிய சமாதான முயர்சியை மேற்கொள்ள வேண்டும்என்ற தீர்மானத்திற்கு அமைய ஐ. நா, பொதுச் செயலாளர் இந் நாட்டு பிரதிநிதிகளையும் சந்தித்துப்பேசினுர்.

இருதரப்பினரும் யுத்த நிறுத்த யோசனைகளை வெளியிட்டுள்ளதாக ஐ, நா. செயலாளர் திரு. பெரஸ் டீ கியூலர் தெரிவித்தார், (கு)

## கட்சிமாறுவதை தடுக்க சட்டம் வேண்டும்

புதுடில்லி, மே 29

தேர்தலில் போட்டியிட்டு வென்ற அபேட்சகர்கள் கட்சி மாறுவதைத் தடுக்க தேர்தல் சட்டம் திருத்தப்படவேண்டும் என இந்திய பிரதம தேர்தல் அதிகாரி திரு. சத்தார் புதுடில்லியில் நடைபெற்ற தேர்தல் அதிகாரிகளின் மாநாட்டில் தெரிவித்தார். (கு)

## விமானங்களில் கைக்குண்டு: தொலைபேசி மிரட்டல்!

புதுடில்லி, மே 29

கைக்குண்டுகள் இரு உள்ளூர் சேவையிலீடுபடும் விமானங்களிலும், நீதிஸ்தலமொன்றிலும் வைக்கப்பட்டிருப்பதாகக் கிடைத்த அனுமதேய தொலைபேசி பயமுறுத்தலைத்தொடர்ந்து, அவ்விரு விமானங்களும் தங்களது பயணத்தை தாமதித்தே தொடர்ந்தன. நீதிஸ்தலமும் சிறிது நேர தாமதத்தின் பின்பு ஆரம்பமானது.

பொலிசார் தீவிரமாக சோதித்தபோதும் விமானங்களிலோ அல்லது நீதிஸ்தலத்திலோ கைக்குண்டுகள் இருக்கவில்லை.

இதைத்தொடர்ந்து புதுடில்லியிலுள்ள பத்திரிகைக் காரியாலயமொன்று பலத்த சோதனைக்குள்ளாகியது.

மணிப்பூரை தனிநாடாக்க வேண்டுமென கோரிவரும் தீவிரவாத குழுவினர் மீது பொலிசார் சந்தேகங்கொண்டுள்ளனர் என செய்திகள்தெரிவிக்கின்றன. [கு]

## இலங்கை தொ. ச. பிரதிநிதிகளுக்கு வரவேற்பு

சென்னை, மே 29

இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள இலங்கை தொழிற்சங்கப் பிரதிநிதிகள் திரு. பெர்ணண்டோ தலைமையில் இங்கு வந்து சேர்ந்தபோது பெருவரவேற்பளிக்கப்பட்டது. (கு)


விற்பனையாகின்றன !

இறக்குமதி செய்யப்பட்ட

★ தேக்கம் முகப்பு கதவுகள்

★ சிலிங் போட்கள்

(எல்லா டிசைன்களிலும்)

★ றபறைஸ்ட் தும்பு மெத்தைகள்

★ சிப்போட் காட்போட்

முதலியன

இப்ராகிம் ஜபார்ஜி

218, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (பஸ்நிலையம் முன்பாக) தொலைபேசி: 409

நம்பிக்கையான நவநாகரிக தங்க வைர நகைகள் வேண்டுமா?

பொ. அம்பலவாணர்

தங்க, வைர நகை வியாபாரம்

119, கஸ்தூரியார் ரேட், யாழ்ப்பாணம்.

போன்: 7199 தந்தி; வைரம்

# ரியூட்டரிகள் விடயத்தில் அரசாங்கம் விழிப்பற்று இருப்பது ஏன்?

## எம்.பிக்களாவது கவனம் எடுப்பரா?

ரியூட்டரிக் கல்வி பற்றிய ஈழநாடு [28-5-82 வெள்ளிகிழமை] கட்டுரை காலம் தாழ்த்தி எழுதப்பட்டதாயினும் மக்களில் ஒரு சிலரேனும் சமூகத்திற்கு கேடுவிளைவிக்கும் காரணிகளை ஆராய முன்வருவது மகிழ்ச்சிக்குரியவிடயமாகும்.

தனியார் பாடசாலைகளை ஒழித்துக்கட்டிய அரசினர் ரியூட்டரிகளை புற்றீசல்போல் தோன்ற அனுமதிப்பதன் நோக்கம்தான என்ன? தற்போதைய கல்வியின் நிலை — மாணவன் ரியூட்டரிகளுச்குப் போகாவிட்டால் பாடசாலையில் ஆசிரியரே, ரியூசனுக்குச் செல்லாத மாணவன் மீது கோபப்படும் நிலை உருவாகிவிட்டது. மாணவன் ஆசிரியர் படிப்பித்த விடயம் விளங்கவில்லை என்னும்போது திரும்பவும் அந்தப்பாடம் ரியூசன் வகுப்பில் படிப்பிக்கப்படும். அப்போது விளங்கவைப்பேன் என்று கூறும் நிலை உருவாகி இருக்கின்றது.

இந்நாட்டின்பண்பாட்டிற்கு ஏற்ப மாணவ மாணவியருக்கு தனித்தனி பாடசாலைகள் இயங்குகின்றன. ஆனல் ரியூட்டறிகளில் என்ன நடைபெறுகின்றது. மாணவரும் மாணவிகளும் ஒன்ருகக் கூடச் சந்தர்ப்பம் ஏற்படுகின்றது. இதனல் அறியாப் பருவத்தினராகிய மாணவ மாணவிகளின் உள்ளம் பாதிக்கப்படுகின்றது. யாழ். நகரை எடுத்துக்கொண்டால் கணக்கிடமுடியாத ரியூசன் சென்ரர்கள் தோன்றியுள்ளன. இதனல் சந்தைக்கு வரும் மக்கள் தொகையிலும் பார்க்கக் கூடிய மாணவர் ரியூசன் சென்ரர்களுக்கு வருவதால் காலை தொடக்கம் இரவு 8 மணி வரை நகரின் சுற்றுடல் அல்லோலகல்லோலப்படுகிறது

நாட்டில் இளம் சந்ததியினர் தவருன வழிகளில் இழுத்துச் செல்லப்படுகிருர்கள் என்ருல் இதற்கு ரியூட்டறிகளும் பெரும் பங்கேற்கவேண்டும் என்பதை அரசினர் உணரத் தவறிவிட்டனரோ என அஞ்சவேண்டியுள்ளது.

### கிராமத்து மாணவி

முன்பெல்லாம், அதாவது ரியூட்டறி யுகத்திற்கு முந்திய காலங்களில் ஒரு கிராமத்து மாணவி பட்டணத்திற்கு வருவது அபூர்வம். தற்போது பட்டணத்திற்கு வந்து பட்டணத்துக் கேளிக்கைகளைக் காண்பதற்காகவே ரியூட்டறிக்குச் செல்கிறேன் என்ற காரணத்துடன் கிராமப்புற மாணவிகள் பட்டணத்திற்குத் தினமும் படையெடுக்கிருர்கள். இதனல் சமூகமும் ஒவ்வொரு தனிக் குடும்பமும் எவ்வாறு பாதிக்கப்படுகின்றன என்பது எழுத்தில் வடிக்கமுடியாதவையாகும்.

ஒரு ஆசிரியன் படிப்பிக்கும்போது ஒரு விடயத்துடன் மட்டும் தான் நிற்பதில்லை அத்துடன் மாணவருக்கு சமூகவியல்பு சீரிய ஒழுக்கம் இன்னேரன்ன நற்பண்புகளையும் கல்வியுடன் சேர்த்துப் புகட்டுகிருன். ஆனல் ரியூட்டறிகளில் படிப்பிப்பவர் ஒருவர் பணம் பெறும் நோக்கு ஒன்றுடனேயே கற்பிக்கிருர். பணத்தைக் கட்டிய மாணவ மாணவியர் கற்பிப்பதை விளங்கிக் கொள்கின்ருர்களா என்பது ரியூட்டரி ஆசிரியரின் கவலை அல்ல. பாடசாலைகளை கண்காணிக்க அரசினரின் உத்தியோகத்தர் மாணவமன்றங்கள் பெற்ருேர் மன்றங்கள் போன்ற எத்தனேயோ உள்ளன. ரியூட்டறிகளை கவனிக்க யாருமே இலர். இந்நிலையில் அரசினர் ஏன்தான் ரியூட்டறி விடயத்தில் விழிப்பற்று இருக்கின்றதோ விளங்கவில்லை.

இலங்கையின் கல்வித் தரத்தை பிற நாடுகள் போற்றுகின்றனரென்ருல் அதற்கு எங்கள் பாடசாலைகள் இயக்கியமுறைதான் காரணமாகக் கொள்ளல் வேண்டும். ரியூட்டறிகள் தோன்றியதால் பாடசாலைகளினதும் ஆசிரியர்களினதும் மதிப்பு கேள்விக்குறியாகிவிட்டது

பின்தங்கிய மாணவர்களும் பாடசாலையில் ஆசிரியர் போதிப்பதற்கு மேலாகக் கற்பிக்க வேண்டியநிலை ஏற்படின் மேலதிக வகுப்புக்களை கற்றுத்தேறிய ஆசிரிய தொழிலில் இருக்கும் ஆசிரியர்களின் உதவியுடனேயே, அந்தந்த பாடசாலைகளே மேலதிக வகுப்புக்களை கட்டணம் வசூலித்து நடத்தலாம் இதனல் ஆசிரியத் தொழில்செய்யும் ஒருவன் தனது ஊதியம் போதாது என்று கருதும் பட்சத்தில் மேலதிக வேலைசெய்து தனது வருமானத்தை கூட்டிக்கொள்ளக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படும்.

கல்விமான்களால் சட்டமியற்ற முடியாது; நாடாளுமன்ற உறுப்பினர்கள்தான் இவ் விடயத்தை அரசுக்கு எடுத்துக்கூறி பரிகாரம் தேட வேண்டும்.

—தில்லைக்கூத்தன்-

## வற்றுப்பளை பொங்கல் ஆரம்பம்

(முல்லைத்தீவு)

பழம் பெருமை வாய்ந்ததும் அற்புதங்கள் நிறைந்ததும், வன்னிப்பிரதேசத்தின் புகழ் மிக்கதுமான வற்றுப்பளை கண்ணகி அம்பாள் கோவில் வருடாந்த பொங்கல் மகோற்சவம் அடுத்த மாதம் 7ம்திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. பொங்கலுக்கான ஆரம்ப கிரியைகள் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமானது.

தீபம் ஏற்றுவதற்கான தீர்த்தம் எடுக்கும் வைபவம் நாளை திங்கட்கிழமை நடைபெறும். திரளாக வரவிருக்கும் அடியார்களின் வசதிக்காகப் பல்வேறு கருமங்களில் கோயிற் பரிபாலன சபையினர் இரவு பகலாக ஈடுபட்டுள்ளனர். கோவிலின் புனரமைப்புவேலை செய்யப்பட்டு அண்மையில் கும்பாபிஷேகம்நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. [அ]

## அமைதி ஆற்றல் அளிக்கும் "பரிசுத்த ஆவி"

ஒரு செயலுக்கு அடிப்படையாக இருப்பது சுபாவம் எனப்படும். ஒரு செயலுக்கு பொறுப்பாளியை ஆள் என அழைப்பர் ஒருஆள் இன்னெரு ஆளுடன்கொள்ளும் தொடர்பு உறவு எனப்படும். அதே போல் இவ்வுலகின் முதல்வனும் பிதா எனப்படும் முழு முதற் கடவுளுக்கும் அவரின் திருமகனும் கிறிஸ்துபெருமானுக்கும் இடை உள்ள உறவு—அன்பு நிலையே பரிசுத்த ஆவிஎனப்படும்இறைவனர் பிதா—சுதன்—பரிசுத்த ஆவி எனும் இம்மூவரும் ஒன்ருகவும் மூவராகவும் ஒரே சமயத்தில் இருப்பதை தான் இறைஇரகசியம் அல்லது பரமதிரித்துவ [முக்கூட்டு தத்துவம்] என அழைக்கப்படுகிறது.

பரிசுத்த ஆவியின் திருநாள் கத்தோலிக்கருக்கு மட்டுமல்லாது அனைத்து கிறிஸ்தவர்களுக்கும் பொதுமைப் பெருநாள்.

பிதா—படைப்பை நடாத்துவதற்கு தூண்டும் பேரன்பே பரிசுத்த ஆவி எனவும் பிதா கிறிஸ்து இருவருடையேஉள்ள உறவே பரிசுத்த ஆவி எனவும் நோக்குகையில் இந்து சமயத்தின் முக்கடவுள் தத்துவத்தில் சிவன் உலகையும் உயிரையும் பராமரிக்க 5 தூண்டுகின்ற சக்தியாக உமையவளை கூறுவதையும் சக்தி என்ற அந்த நிலையே கிறிஸ்தவத்தில் பரிசுத்த ஆவி என வடிவு பெறுகிறதோ எனும் ஆய்வும் உண்டு.

படைப்பை பிதாவின் தொழிலாகவும் மீட்பு அல்லது இரட்சிப்பை கிறிஸ்துவின் தொழிலாகவும் கூறும் கிறிஸ்தவம் மனிதர்களை ஒவ்வொரு நாளும் இயக்கும் — புதுப்பிக்கும்—அர்ச்சிக்கும் தொழில்பாடுடையவராக தூய ஆவியானவரை காட்டுகிறது.

பரிசுத்த ஆவியே மனித வாழ்வின் இறைவாழ்வின் ஊற்று. இதனலேயே சாத்தான் எனப்படும் தீய சக்திகளின் தலைவனலும் பேய்களாலும் ஏற்படுத்தப்படும் தீங்குகளையும் பாவங்களால் மனிதர் அனுபவிக்கும் பிணிநோய்களையும் தீர்க்கும் ஆற்றல் படைத்தவராகவும் பரிசுத்த ஆவி திகழ்கிருர். மனிதனைப் பேய் பிடிப்பதிலும் மனிதன்பேயைப் பிடிப்பதே அதிகம் என்பார்கள். அதாவது மனிதன் பில்லி சூனியம் செய்வினை போன்றவற்ருல் பேய் தம்மை பிடிப்பதாக கற்பனை செய்வதினுயே இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பேய் மனிதனைப்பற்றுவததே அதிகம் என்பர். அவ்வாறே உடல் நோய்களும் உள்ளத்தால் மனச்சிக்கலாலேயே பெருமளவு உருவாக்கப்படுவதாக கூறுவர். இவைகளிலிருந்து குணமளித்து அமைதியையும் ஆற்றலையும் அளிப்பவர் பரிசுத்த ஆவியே ஏனெனில் ஒரு மனிதன் உடல்—ஆன்மா—பரிசுத்த ஆவி எனும் முக்கூட்டுடனுமே திகழ்கிருன். இதனை உணரும் மனிதர்கள் பரிசுத்த ஆவிதம்முடன் இருப்பதினல் தயக்கு எவ்வித தீங்கும் ஏற்பட இறைவன் அனுமதிக்கமாட்டான் என உறுதியாக நம்புவதால் இவர்கள் வாழ்வு மேம்பட்டு இவ்வுலகிலும் மறு உலகிலும் இன்ப வாழ்வுபெறுகின்றனர்.

எனவே இன்று பரிசுத்த ஆவியிடம் எம் மக்களுக்கு அமைதியையும் சாந்தியையும் ஆற்றலையும் அளித்து அருள்செய்யும்படி பிரார்த்திப்போமாக!

--- பற்றிமாகரன் ---

## ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஞாயிறு உற்சவம்

(புலோலி)

சரித்திரப்பிரசித்திபெற்ற ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் ஞாயிறு உற்சவம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வாலய தர்மகர்த்தா சபையினரின் தீர்மானத்திற்கமைய பிரதி ஞாயிற்றுக்கிழமைகள் தோறும் ஞாயிறு உற்சவம் நடைபெற்றுவகின்றது

பிரதி ஞாயிறு உற்சவத்தில் சிறப்பம்சமாக வல்லிபுர ஆழ்வார் பகல் நேரத்தில் வீதி வலம்வந்து பக்தர்களுக்கு அருள் வழங்கிவருகிருர்.

இவ்வாலயத்திற்கு சுமார் 20; 000 ரூபா பெறுமதியான ஒலிபெருக்கியொன்று அன்பரொருவரால் அன்பளிப்புச் செய்யப்பட்டிருந்தது.

இவ் ஒலிபெருக்கி கடந்த சித்திரை மாதம் சம்பிரதாய பூர்வமாக இயங்க ஆரம்பித்ததெனினும் கடந்த 5ம் திகதி தொடக்கம்தான் பூரணமாக இயங்க ஆரம்பித்துள்ளது.

தினந்தோறும் காலை 5—45 மணிதொடக்கம் 7 மணி வரை திருப்பல்லாண்டு, ஆண்டாள் திருப்பாவை, ஸ்ரீ வெங்கடேஸ்வர பாடல்கள் என்பன ஒலிபரபரப்பப்பட்டு வருகின்றன. ஞாயிற்றுக்கிழமைகளிலும் விசேட புண்ணிய தினங்களிலும் ஒலிபெருக்கி முழுநாளும இயங்கி வருகின்றது.

இவ்வாலய இராசகோபுர அமைப்பு வேலைகளில் சித்திர வர்ணவேலைகள் முடிவடைந்து வருகின்றது. ஆலய தர்மகர்த்தாசபை இராசகோபுர அமைப்பு வேலைகளை மிகத் துரிதகதியில் பூர்த்தியாக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

### திருக்கேதீஸ்வரம் 5-ந் திருவிழா
### இமயவன் மருகா போற்றி

உமையொரு பாகா போற்றி!
சடைநதி யுடையாய் போற்றி !!
இமயவன் மருகா போற்றி !
அடைபவர்க் கருள்வாய் போற்றி !!
எமையா ளுடையாய் போற்றி !
எதிலெங்கும் நிறைவாய் போற்றி !!
எமபய மறுப்பாய் போற்றி !
கேதீஸ்வரா போற்றி போற்றி !!

--முருகு

## நூலகம் எரிந்ததை நினைவு கூரும் உண்ணுவிரதத்தில்பங்குபற்ற யாழ்.மேயர் அழைக்கின்ருர்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை யாழ். பொதுசன நூல்நிலைய முன்றலில் இடம் பெறவுள்ள உண்ணுவிரதத்தை யொட்டி யாழ். மாநகர முதல்வர் திரு. இராஜா விசுவநாதன் பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:—

"யாழ். பொதுசன நூலகம் எரிக்கப்பட்ட ஓராண்டு நிறைவை நினைவு கூருமுகமாக யாழ். பொதுசன நூலகமுன்றலில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 7 மணிமுதல் மாலை 5 மணிவரை உண்ணுவிரதமும் பிரார்த்தனைகளும், இடம்பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்ட எம், பி. களும் அபிவிருத்தி சபை உறுப்பினர்களும் நகரசபை மாநகரசபை உறுப்பினர்களும் நூல்நிலையக் குழுவினரும் சேர்ந்து பங்குகொள்கிருர்கள். பொதுமக்களையும் மாநகர வரியிறுப்பாளர்களையும் இந் நிகழ்ச்சியில் பங்காளர்களாக சேர்ந்து கொள்ளவருமாறு அன்புடன் அழைக்கின்ருேம்.

யாழ். பொதுசன நூல் நிலையத்தை விரைந்து மீள்வித்துப் புதுப்பிப்போமென அந் நூலகம் ஒரு பண்பாட்டுப்படுகொலையாக நிரூபிக்கப்பட்ட ஓராண்டு நிறையும் போது மீண்டும் உறுதியெடுத்துக் கொள்வோம்."

## பரந்தன் சந்தை: பாவனையாளர் விற்பனையாளர் கஷ்டம்

[பரந்தன்]

பரந்தன் சந்தையில் அமைந்துள்ள மீன் சந்தை போதிய பராமரிப்பு இன்றி, மழை பெய்யும் வேளையிலும் மற்றும் வெய்யில் நேரத்திலும பாவனையாளர்களும் வியாபாரிகளும் மிகுந்த கஷ்டமுற வேண்டியுள்ளது இது சம்பந்தமாக யாழ். மாவட்ட அபிவிருத்தி சபையின் கிளிநொச்சி உப அலுவலகம் உரிய நடவடிக்கை எடுக்குமா என இப்பகுதி பொதுமக்களும், வியாபாரிகளும் எதிர் பார்க்கின்றனர்.

## கிராமப்புறங்களில் குடும்பநலத்திட்டப் பிரசாரம்

(மன்னுர்)

மன்னுர் மாவட்ட கிராமப் புறங்களில் கடந்த 2 மாத காலத்திற்குள் 10 குடும்ப நல திட்ட சங்கக் கிளைகள் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப் பட்டதோடு 3 பயிற்சி வகுப்புக்களும், ஒரு எழுச்சிக் கூட்டமும் நடத்தப்பட்டது.

இதற்கான சகல நடவடிக்கைகளையும் மன்னுர் மாவட்ட குடும்பநலத் திட்ட அதிகாரி திரு.ஜேம்ஸ் ஜோ.கமலாகரன் மேற்கொண்டிருந்தார்.

### மந்திரவாதியை நம்பி பெட்டிக்குள்

# பூட்டி வைத்த நகைகள் இரும்புத் துண்டுகளாகினவாம்

## மல்லாகம் நீதிமன்றத்தில் ருசிகரவழக்கு

[மாவிட்டபுரம்]

நோய் குணமடையும் வரை தங்கநகை அணியக்கூடாது என்று நிபந்தனை விதித்த மாந்திரீகரை நம்பி 38 பவுண் தங்கநகைகளை பெட்டியினுள் போட்டுப்பூட்டி வைத்த குடும்பத்தினர் பின்னர் பொலிசாரின் உதவியுடன் பெட்டியை உடைத்துப் பார்த்தபோது தங்கநகைகள் இரும்புத்துண்டாக மாறியிருந்ததாகத் தெரிவிக்கப்பட்ட மோசடிச் சம்பவம் குறித்து சம்பந்தப்பட்ட மாந்திரீகர் மீது மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பெரிய விளானைச் சேர்ந்த மாதன் தர்மலிங்கம் என்பவர் காங்கேசன்துறைப் பொலிசில் இச்சம்பவம் குறித்து புகார் செய்திருந்தார்.

தமது மகனுக்கு போலியோ நோய் ஏற்பட்டு வலது குறைந்திருந்ததால் தமது மருமகன் மூலம் வவனியாவைச் சேர்ந்த மாந்திரீகர் ஒருவரை அழைத்து மாந்திரீக வேலைகள் செய்ததாகவும் இந்நோய் குணமடையும் வரை வீட்டிலுள்ள எவரும் தங்க நகை அணியக்கூடாது என மாந்திரீகர் நிபந்தனை விதிக்கவே தம்மிடமிருந்த 38 பவுண் தங்கநகைகளை அவரிடம் கொடுத்ததாகவும், அவற்றை பெட்டியொன்றினுள் போட்டுப் பூட்டிய மாந்திரீகர் அதனை பூசையில் வைத்ததாகவும், நோய் குணமடையும்வரை பெட்டியைத் துறக்கவேண்டாமென அவர் கூறிய தாகவும் நோய் குணமடைவதற்கான அறிகுறிகள் இல்லாமையால் இதில் சந்தேகம் கொண்டு பொலிசில் புகார் செய்ததாகவும் அவர் கூறியிருந்தார்.

இப்புகாரின் பேரில் விசாரணை செய்த பொலிசார் சம்பந்தப்பட்ட வீட்டில் பூட்டி வைக்கப்பட்டிருந்தபெட்டியை உடைத்தபோது அங்கு தங்க நகைகளுக்குப்பதிலாக இரும்புத்துண்டுகளே இருந்தன.

இதனையடுத்து பொலிசார் மாந்திரீகரான வவனியா தோணிக்கல்வாசி டேவிட் லெபொனன்சியஸ் என்பவரையும் வீட்டுக்காரரின் மருமகன் செபமாலைமுத்துவையும் விசாரணைக்குட்படுத்தினர்,

### இருவருக்கும் றிமாண்ட்

மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட இருவரும் றிமாண்டில் வைக்கப்பட்டிருந்தனர்.

மேற்படி மாந்திரீகர் மீது 80 ஆயிரம் ரூபா பெறுமதியான 38பவுண் தங்கநகைகளை மோசடி செய்ததாக மல்லாகம் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் பொலிசார் வழக்கு தொடர்ந்தனர். மற்றவர் விடுதலை செய்யப்பட்டார்.

மேற்படி மாந்திரீகர் தாம் சுற்றவாளிஎனக் கூறியதையடுத்து விசாரணை செப்டம்பர் 6-ம் திகதிக்கு ஒத்திப் போடப்பட்டது. எதிரி சார்பில் சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜரானு

---

### தீயிடப்படவிருந்த வாகனம்

# சாரதியின் சாதுரியத்தால் தப்பியது

[மன்னர்]

மன்னாரிலிருந்து பேசாலையை நோக்கி வந்த பேசாலை கிராமவாசி ஒருவருக்குச் சொந்தமான தனியார் வாகனம் ஒன்றை தாராபுரம் சந்தியில் வைத்து தீ வைப்பதற்கு எடுத்த முயற்சி தோல்வியில் முடிந்தது. கடந்த புதன் கிழமை இரவு இடம்பெற்ற இச்சம்பவம் பற்றி கூறப்படுவதாவது:

மன்னாரிலிருந்து பேசாலையை நோக்கிவந்த பேசாலை கிராமத்தவர் ஒருவருக்குச் சொந்தமான வாகனத்தை தாராபுரம் சந்தியில்வைத்து தாழ்வுபாடு கிராமத்தைச் சேர்ந்த கோஷ்டி ஒன்று பயங்கர ஆயுதங்களுடன் வழிமறித்தது. வாகனத்தின் சாரதி அக்கோஷ்டியால் பலமாகத் தாக்கப்பட்டதுடன் வாகனத்தின் முன்கண்ணாடியும் உடைத்துச் சேதப்படுத்தப்பட்டது.

இந்நேரத்தில் அவ்வாகனத்தில் பயணம் செய்த பிரயாணிகள் எல்லோரும் வாகனத்தை விட்டிறங்கி காட்டிற்குள் ஓடித்தப்பிக்கொண்டனர்.

வாகனத்தைச் சேதப்படுத்தியோர் அவ்வாகனத்தை தீ வைப்பதற்கு முயற்சித்த போது வாகனத்தின் சாரதி அதனை சாதுரியமாக செலுத்திக் கொண்டு பேசாலையை வந்தடைந்தார்.

இச்சம்பவம்பற்றி விசாரணை மேற்கொண்டுவரும் மன்னார் பொலிசார் தாழ்வுபாடு கிராமத்தைச் சேர்ந்த சந்தேக நபர் ஒருவரைக் கைது செய்ததுடன் மேலும் பல சந்தேக நபர்களைத் தேடிவருகின்றனர். [கி]

---

### வீட்டார் நித்திரை

# யன்னல் வழியாக புகுந்து திருடர் கைவரிசை

(மாவிட்டபுரம்)

வீட்டுக்காரர் நித்திரையில் ஆழ்ந்திருக்க யன்னலை உடைத்து உட்புகுந்த திருடர்கள் தமது கைவரிசையை திறம்பட நடத்திவிட்டு தலைமறைவாகி விட்டனர்.

ஏழாலை வடக்கில் பாக்கியம் பாலச்சந்திரன் என்பவரது வீட்டில் இத்திருட்டு இடம்பெற்றுள்ளது.

இரவு, வீட்டைப் பூட்டிவிட்டு வீட்டுக்காரர்கள் உறங்கிவிட்டதாகவும், அவர்கள் ஆழ்ந்த நித்திரையில் இருக்கும் சமயம் வெகு சாதுரியமாக யன்னலை உடைத்து உட்புகுந்த திருடர்கள் 25 பவுண் தங்க நகைகள், 1500 ரூபா பணம், சேலைகள், உடுப்புகள் போன்றவற்றை திருடிச்சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சுன்னாகம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் பொன். சுகுணேந்திரன் தலைமையில் பொலிசார் தீவிரவிசாரணையில் இறங்கியுள்ளனர்.

கையடையாளங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

யாழ். உதவிப்பொலிஸ் அதிபர் திரு. எஸ். நவரத்தினராஜாவும் திருட்டு இடம் பெற்ற வீட்டை பார்வையிட்டார்.

---

### பருத்தித்துறைப் பொலிசாரிடம் சிக்கியவர்கள்

# 11 துப்பாக்கிமுனைக் கொள்ளைகளில் சம்பந்தப்பட்டவர்களாம்

## உருக்கியநிலையில் 75 தங்கப்பவுண் மீட்பு
## தேடுதலில் மேலும் 6 பேர்

(புலோலி)

வல்வெட்டி இந்து தமிழ்கலவன் பாடசாலை மலகூடக் குழியில் அண்மையில் கண்டு பிடிக்கப்பட்ட பயங்கர ஆயுதங்களுக்கும் இக்கோஷ்டியினருக்கும் தொடர்பு இருப்பதாக இவர்கள் ஒப்புக்கொண்டுள்ளனராம்.

பருத்தித்துறைப் பொலிசாரினால் துப்பாக்கிகள், பயங்கர ஆயுதங்கள் சகிதம் கைது செய்யப்பட்ட கொள்ளைக் கோஷ்டியினர் வடபகுதியில் நடைபெற்ற பதினொருதுப்பாக்கிமுனைக்கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டவர்கள் என்பது பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளதாம் இவர்கள் மூலம் 75 தங்கப் பவுண் நகைகள் உருக்கிய நிலையில் பொலிசாரால் மீட்கப்பட்டுள்ளன.

காங்கேசன்துறை சுன்னாகம் வல்வெட்டித்துறை, பருத்தித்துறை ஆகிய பொலிஸ் பகுதிகளில் அண்மைக்காலங்களில் நடைபெற்ற துப்பாக்கிமுனைக்கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்ட இக்கொள்ளைக் கோஷ்டியினர் பருத்தித்துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. எஸ். திருச்சிற்றம்பலம் தலைமையில் காங்கேசன்துறை, சுன்னாகம், வல்வெட்டித்துறைப் பொலிசாரினல் தொடர்ந்து விசாரணை செய்யப்பட்டுவருகின்றனர். பொலிசார் இக்கோஷ்டியினரால் கொள்ளையடிக்கப்பட்ட மற்றும் பொருட்களை மீட்பதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளனர்.

இச்சம்பவங்கள் தொடர்பாக இன்னும் ஆறு இளைஞர்கள் கைதுசெய்யப்படவுள்ளதாகவும் பொலீஸ்பகுதியிலிருந்து தெரியவருகின்றது.

கொள்ளைக்கோஷ்டியினரால் பாவிக்கப்பட்டு வந்த ஏ 40 கார்பருத்தித்துறைப் பொலிஸ் பாதுகாப்பிலே வைக்கப்பட்டுள்ளது.

---

## நினைவு அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான நிர்வாக சபை முன்னாள் தலைவர் அமரர் திரு. சே. தியாகராஜாவின் நினைவு அஞ்சலி வைபவம் எதிர்வரும்புதன்கிழமை நடைபெறவிருக்கின்றது.

தேவஸ்தானநிர்வாகசபைத் தலைவர் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் நடைபெறவிருக்கும் இந்நினைவாஞ்சலிவைபவத்தில்பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. தர்மலிங்கம் திரு சே தியாகராசாவின் உருவப்படத்தை திரைநீக்கம் செய்துவைப்பார். யாழ். கல்விப்பணிப்பாளர் திரு. க. சிவநாதன் நினைவுப் பேருரையை வழங்குவார். செல்வி. சுலபூஷணிகுலசேகரத்தின் பக்திப்பாடல் நிகழ்ச்சியும் இடம் பெறும். (கி)

---

## சட்ட நடவடிக்கை

[புலோலி]

புலோலி-அம்பன் கமநலச் சேவை நிலையப்பகுதிக்குள் உள்ள விவசாயிகளில் ஏக்கர் வரி செலுத்தாத விவசாயிகள் மீது சட்ட நடவடிக்கைகள் எடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. [அ]

---

## புத்தகங்கள் அன்பளிப்பு

(பரந்தன்)

கிளிநொச்சி கனகபுரம் கிராம அபிவிருத்திச்சங்கத்தின் நடவடிக்கையால் கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்திற்கு ஐயாயிரம் ரூபா பெறுமதியான புத்தகங்களும் அலுமாரியும் அன்பளிப்பாகக் கிடைத்துள்ளன. (இ)

---

## சந்நீக்கிலார் நாட்டுக்கூத்து

(மன்னார்)

மன்னார் பனங்கட்டிக் கொட்டு வட்டார மக்களால் பண்டைக் காலந்தொட்டு பரம்பரை பரம்பரையாக மேடையேற்றி வந்த ''சந்நீக்கிலார்'' நாட்டுக்கூத்தை மீண்டும் மேடைஏற்றுவதற்கு ஆயத்தங்கள் நடைபெற்று வருகின்றன. கடந்த வெள்ளிக்கிழமை நடந்த அண்ணாவிமார் மகாநாட்டில் அண்ணாவியார் திரு. வ. ஆரோக்கியம், திரு. சின்னத்துரை சீனியப்பு, திரு. சவிரிமுத்து சீனியப்பு ஆகியோரும், பனங்கட்டிக்கொட்டு இளைஞர் பேரவைத்தலைவர் திரு. கபிரியேற்பிள்ளை செபஸ்தியாம்பிள்ளை, நாட்டுக்கூத்துப் பின்னணிப் பாடகர் திரு. தப்பிப்பிள்ளை சேவியர் புனித வளனார் பக்திச்சபை பொதுச் செயலாளர் திரு வி. பிரான்சீஸ் (பாதுகாப்பு உத்தியோகஸ்த்தர்) ஆகியோரும் கலந்து கொண்டனர். இந்நாட்டுக்கூத்தின் சிறப்பு அம்சமான ஒருபகுதியை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் கலைஅரங்கப் பகுதியில் ஒலிபரப்புவதற்கும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

---

## சுலோகப் போட்டியில் முதலிடம்

(புலோலி)

யாழ். மருத்தவச்சங்கம் நடத்திய மருத்துவக்கண்காட்சி தொடர்பான சுலோகப்போட்டி மேற்பிரிவில் பருத்தித்துறை புலோலி வேலாயுதம் ஆண்கள் மகாவித்தியாலய உயர்தர வகுப்பு மாணவன் செல்வன் தம்பு இராமச்சந்திரன் முதலாம்இடத்தைத் தட்டிக் கொண்டார்.

வித்தியாலய மாணவ முதல்வரின் தலைவரான திரு. இராமச்சந்திரன் இதற்கான பரிசில்களைக் கல்லூரி அதிபர் திரு. வி. சே. ஏகாம்பரநாதனிடமிருந்து பெற்றுக்கொண்டார். (அ)

---





யாழ்ப்பாண மக்களின் அபிமானம் பெற்ற நிறுவனம்
மின்சார உபகரணங்கள் பாடசாலை
உபகரணங்கள், வீட்டுப்பாவனைப் பொருட்கள்
மற்றும் பரிசுப்பொருட்களுக்கு

**அம்பலவாணர் அன் சன்ஸ்**

(இலங்கை தேசிய கடதாசிக் கூட்டுத்தாபன உத்தரவுபெற்ற வியாபாரிகள்,
மின்சார ஒப்பந்தகார்,

196, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(போன் : 8291

தலைமையகம் : பேர்ள் லேட்ஸ் - அம்பலவாணர் அன் சன்ஸ்
78, மலிபன் வீதி, கொழும்பு போன் : 24821 — 28244
லெட்சுமிபவான் 97, ஒல்ஹொட் மாவத்த, — கொழும்பு

காக்கைதீவில் விளையாட்டரங்கு:

# தொல்பொருள் ஆய்வுக்கு பாதகமாக இருக்குமா?

## குழு நியமித்து ஆராய அபிவிருத்திசபை தீர்மானம்

-- ஏ. வி. மாணிக்கம் --

(யாழ்ப்பாணம்)

காக்கைதீவில் சர்வதேசப் பொதுவிளையாட்டரங்கு நிறுவப்படவிருப்பது தொடர்பாக கடந்த புதன்கிழமை நடைபெற்ற யாழ். மாவட்ட அபிவிருத்திசபைக் கூட்டத்தில் சாதகமாகவும் பாதகவும் டல கருத்துக்கள் வெளியிடப்பட்டன. காக்கைதீவில் விளையாட்டரங்கு அமைக்கப்படுவதை சபைத்தலைவர் திரு. சு. நடராசா ஆதரித்துக் கருத்து வெளியிட்டார்.

கோப்பாய் எம். பி. திரு. ஆலாலசுந்தரம் 'காக்கைதீவில் விளையாட்டுமைதானம் அமைப்பதைக் கடுமையாக எதிர்த்தார். இப்பகுதியில் தமிழ்மக்களின் வரலாறு தொடர்பான பல்வேறு தொல்பொருட்கள் கிடைத்திருப்பதாவும் எனவே இங்கு விளையாட்டுத்திடல் அமைமதால் தொல்பொருள் ஆராய்ச்சிக்கு இடையூறுவிளையும் என்றும் அவர் வலியுறுத்தினர்.

இந்தப்பிரச்னையைத் தீர்க்கும் விதத்தில் மானிப்பாய் எம். பி. யின் தலைமையில் நிபுணர்கள் அடங்கிய ஒருகுழுவை அமைத்து ஆராயலாம் என்று திரு. துரைத்தினம் எம். பி. தெரிவித்த யோசனையைசபை ஏற்றுக் கொண்டது.

கடந்த புதன்கிழமை தலைவர் திரு. சு. நடராசா தலைமையில் சபை கூடியபோது போது உறுப்பினர் திரு.க.சின்னத்துரை ஒரு பிரேரணையைச் சமர்ப்பித்தார்.

யாழ்.பல்கலைக்கழகத் தொல்பொருளாராய்ச்சிப் பகுதியினர் தொல்பொருள் ஆராய்ச்சியைத் தற்போது காக்கைதீவில் செய்து வருகிறார்கள். அவ்விடத்தை ஒரு பொது பொதுவிளையாட்டு மைதானமாகமாற்றுவதற்கு அரசாங்க மேலிடம் மேற்கொள்ளும் முயற்சி அப்பகுதியில் புராதன ஆராய்ச்சிகளுக்குத் தடையை ஏற்படுத்துமாகையால் காக்கைதீவுத் திடலைப் பொதுவிளையாட்டுமைதானமாக்க எடுக்கும் முயற்சியைக் கைவிடுமாறும் அதற்கு அருகில் இருக்கும் வெற்று நிலத்தை எடுத்துப் பொதுவிளையாட்டு மைதானமாக்கும்படியும் இச்சபை அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கின்றது என்று அத்தீர்மானத்தில் கூறப்பட்டிருந்தது.

திரு. ஆலலாசுந்தரம் இப்பிரேரணையை ஆமோதித்து திருத்தம் கொண்டுவந்தார்.

''கிறிஸ்துக்கு முன்பு இந்நாட்டில் தமிழர்கள் வாழ்ந்தார்கள் என்பதற்குரிய சாதனங்களை தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் இப்பகுதியில் கண்டுபிடித்திருக்கிறார்கள். யாழ்ப்பாணத்தில் பொதுவிளையாட்டுமைதானம் அமைப்பதற்கு இடம் இல்லையா? அரியாலையிலுள்ள செம்மணி உப்பளக்காணி எதுவித பாவனைக்கும் உதவாத நிலையில் இருக்கிறது. காக்கைதீவில் பொதுவிளையாட்டு மைதானம் அமைக்கும் முயற்சியைக் கைவிட்டு அரியாலை செம்மணி உப்பளப் பகுதியில் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டும் கொள்ளுகிறேன். இதை திருத்தப்பிரேரணையாக ஏற்றுக் கொள்ளவும் என்று திரு. ஆலாலசுந்தரம் தமது பேச்சில் குறிப்பிட்டார்

### தலைவர் பதில்

அபிவிருத்தி சபைத்தலைவர் திரு. நடராசா இதற்குப்பதிலளித்துப் பேசுகையில், தெரிவித்ததாவது;

ஒரு விளையாட்டுத்திடலை அமைப்பதற்கு பல லட்சம் ரூபா தேவைப்படும். காக்கைதீவுத்திடலை விளையாட்டு ஆசிரியர்கள்தான் தேர்ந்தெடுத்தார்கள். விளையாட்டுத்துறையின் ஒரு முக்கிய அபிவிருத்தியை நாம் இழக்கக்கூடாது. இந்த இடத்தை இழந்தால், இந்த விஷயம் ஒரு காலமும் நடைபெறுது.

''யாழ்ப்பாணத்தில் எந்தக் காணியைச் சுவீகரிக்கப்போனாலும் அதற்கு ஒருதடை ஏற்படுகிறது. தயவு செய்து சிந்தித்து ஒரு முடிவுக்குவருவோம் அரியாலையில் உள்ளகாணி பற்றியும் அதிகாரிகள் சிந்தித்தார்கள்தான்''

### துரைரத்தினம் யோசனை

திரு. திரு. க.துரைரத்தினம் கருத்துவெளியிடுகையில் கூறியதாவது: மானிப்பாய் எம். பி. தலைமையில் யாழ். பல்கலைக்கழக தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கொண்ட ஒரு குழுவை நியமித்து, அவர்களின் அனுசரணையுடன் காக்கைதீவில் நடைபெறும் ஆராய்ச்சி சம்பந்தமாக ஆராய்வது உகந்ததுஎன்று கருதுகிறேன்',

தலைவர் நடராசா இதற்குப் பதிலளிக்கையில் கூறியதாவது:

''யாழ். பல்கலைகழக தொல்பொருளாராய்ச்சி விரிவுரையாளர்களான பேராசிரியர்கள் திருச்சிற்றம்பலம், இந்திரபாலாவுடன் ஆராய்ந்து முடிவுசெய்வோம். யாழப்பாணத்தில் நிறைவேறக்கூடிய அபிவிருத்தியென்றால் காக்கைதீவில் விளையாட்டுத்திடல் அமைக்கக்கூடியதாயிருப்பது ஒன்றுதான் இதுசம்பந்தமாக நானும், யாழ். மாவட்டசெயலாளரும் ஆலோசித்து வருகின்றோம். திரு. துரைரத்தினம் சொன்னதைக் கருத்தில் கொண்டு செயல்படுவோம். அவர் கொண்டுவந்த பிரேரணை உசிதமானது; ஒப்பேற்றக்கூடியது.

திரு. ஆலாலசுந்தரம் தமது பிரேரணையைவாபஸ்பெறுவிட்டால் வாக்கெடுப்புக்கு விடுகிறேன்.

திரு. ஆலாலசுந்தரம்: எனது திருத்தப்பிரேரணையை வாபஸ் பெறுகிறேன். ஆனல் காக்கைதீவு சுவீகரிக்கப்படுவதால், பாரதூரமான விளைவுகள் ஏற்படும். எமது தமிழ்ப்பாரம்பரியம் அழியாமல் பார்த்துக் கொள்ளுங்கள் காக்கைதீவைத்தவிர வேறுஇடம் இல்லையா?

தலைவர் திரு. நடராசா யாழ்ப்பாணம் பட்டினத்துக்கருகில் பொருத்தமாக அமைந்த இடம் இது ஒன்றுதான் தகுதிவாய்ந்த அதிகாரிகளின் அனுமதியுடன்தான் இந்த இடத்தை செய்தோம்''

திரு. சின்னத்துரை காக்கைதீவில் தொல்பொருளாராய்ச்சி செய்யும் இடத்தை கம்பிவேலி போட்டு புறம்பாக ஒதுக்கிவிட்டு, மீதியுள்ள நிலத்தில் பொதுவிளையாட்டு மைதானம் அமைக்கலாம்.''

திரு. துரைரத்தினத்தின் பிரேரணை ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

''இதற்கென நியமிக்கப்பட்ட குழுவின் ஆலோசனையுடன் காக்கைதீவில் பொது விளையாட்டு மைதானம் அமைப்பது உசிதம் என்று தலைவர் தெரிவித்தார்.

---

## விபத்தில்...

[3ம் பக்கத் தொடர்ச்சி]

குச்சென்றுவிபத்துக்குள்ளானவர்களின் குடும்பங்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக மத்திய செய்தி ஒலிபரப்பு உதவி அமைச்சர் திரு. ஆர். எம்.முகமட் கான் 65,000 ரூபாவிற்கான காசோலையைதிரைப்பட தயாரிப்பாளர் சங்கத்தலைவர் திரு. பாலச்சந்திரனிடம் கையளித்தார். திரைப்படத் தயாரிப்பாளர் சங்கமும் 18,000 ரூபாவை விபத்துக்குள்ளான குடும்பங்களுக்கு வழங்கவுள்ளது.

கிமாச்சலப் பிரதேசத்தில் வெளிப்புறக்காட்சிப் படப்பிடிப்புக்காக சென்னை திரைப்படத் தயாரிப்புக்குழு ஒன்று சென்றுகொண்டிருந்த வான் விபத்துள்ளானதால் 8 பேர் மரணமானதும் 20 பேர் படுகாயமடைந்ததும்தெரிந்ததே. (கு)

---

தமிழகத்தில் கைதானவர்கள் பற்றி

# ஹமீட் - வெரப்பிட்டிய இரகசிய ஆலோசனை

[கொழும்பு]

தமிழகத்தில் கைதுசெய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருக்கும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் என அழைக்கப்படும் இளைஞர்களை இலங்கைக்கு கொண்டுவருவதற்குவேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்து இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜனப் ஏ. ஸி. எஸ். ஹமீட்டும், பிரதி பாதுகாப்பு அமைச்சர் திரு, ரி. வெரப்பிட்டியாவும் உயர்மட்ட ஆலோசனைகளை நடத்தினர்கள்.

ஹவானவில் இம்மாதம் 31ம் திகதி முதல் ஜூன்மாதம் 4ம் திகதிவரை நடைபெறும் அணிசேரா நாடுகளின் அமைச்சர்கள் மகாநாட்டில் கலந்து கொள்ளுவதற்காக அங்கு செல்லு முன்னரே ஜனப் ஹமீட் இந்த ஆலோசனைகளை நடத்தினர்,

### ஹவானவில்

ஹவானு சென்றுள்ள ஜனப் ஹமீட் அங்கு இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு நரசிம்மராவுடன் கைதான இளைஞர்களை இலங்கைக்குக் கொண்டுவருவது குறித்து பேச்சு நடத்துவார் என்று தெரியவருகிறது. [இ]

---

# சிற்றூழியர் சங்கம் இன்று கூடுகிறது

[கோண்டாவில்]

ஜனநாயக உள்ளூராட்சி சிற்றூழியர் சங்கத்தின் 3வது வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்றுஞாயிற்றுக்கிழமை காலை யாழ். அபிவிருத்திச் சபை உடுவில் பணியகத்தில் சங்கத் தலைவர் திரு, சு. சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளது. [இ]

---

# துப்பாக்கிச் சூட்டு மரணம்: வைத்திய அறிக்கை தாக்கல்

[மாவிட்டபுரம்]

காங்கேசன்துறையில் துப்பாக்கிச்சூட்டுக் கிலக்கான நபரின் மரணம் துப்பாக்கிச் சூட்டினுல் ஏற்பட்ட அதிர்ச்சி இரத்தப்பெருக்கு என்பவற்றுல் சம்பவித்தது என வைத்திய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறையில் கடந்த 16ம் திகதி இனந்தெரியாத முகமூடி அணிந்த துப்டாக்கி நபர்களால் 24 வயதான சஞ்சீவி ஜெகநாதன் என்னும் வாலிபர் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார்.

இம்மரணம் குறித்து யாழ். பதில் சட்ட வைத்திய அதிகாரி திருமதி யோகரஞ்சிதம் நவரத்தினம் பிரேத பரிசோதனை நடத்தி காங்கேசன்துறைப் பொலிசாருக்கு வைத்திய அறிக்கையை அனுப்பிவைத்துள்ளார்.

அந்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கொலையுண்டவரின் உடலிலிருந்து 10 ரவைகளும் எடுக்கப்பட்டன, அவற்றையும் மற்றும் சான்றுப் பொருட்களையும் பொலிசார் பொறுப்பேற்றுள்ளனர்.

ஜூன் 2ம் திகதி மேற்படி மரணம் குறித்த மரணவிசாரணை மல்லாகம் நீதிமன்றத்தில் மீண்டும் எடுக்கப்படும் போது மேற்படி வைத்திய அறிக்கைஆராயப்பட்டு தீர்ப்பு வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

---

சென்ற இடங்களை செழிப்பாக்கினன்

# நாடு பிடிக்கும் எண்ணம் தமிழனுக்கு இல்லை!

## தமிழக அறிஞர் கருத்து

(வவனியா)

தமிழன் தான் சென்ற இடமெல்லாம் வளம் கொழிக்கும் நாடாக மாற்றினனே தவிர அவனுக்கு நாடுபிடிக்கும் எண்ணம் இருந்ததில்லை என்று தமிழக காந்திய அறிஞரும், தமிழ்ப்பணி சிறப்பாசிரியர், பெருங்கவிக்கோ டாக்டர் வா. மு. சேதுராமன் கருத்து வெளியிட்டார்.

காந்திய தலைவர் திரு. ச. அ. டேவிட் தலைமையில் வவனியா நகரசபை திறந்த வெளி அரங்கில் நடைபெற்ற பாரதி நூற்றுண்டு விழாவில் உரையாற்றியபோதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

விழா ஆரம்பத்தில் காந்திய அமைப்பு செயலாளர் டாக்டர் எஸ். இராசசுந்தரம் வரவேற்புரை நிகழ்த்தினர். திரு. சேதுராமன் மேலும் பேசுகையில், சுதந்திரதாகம் தமிழ்மக்களை பிடித்துள்ளது. இது நெருப்பைப்போல் வேகமாக பரவக்கூடியது. இதை அணைக்கவோ,அழிக்கவோமுடியாது.

உலகிலே 32 நாடுகள் தமிழினம் வாழ்ந்தபோதும் பல கொடுமைகளுக்கும், இன்னல்களுக்கும் மத்தியில்தான் வாழ வேண்டியவர்களாக இருக்கின்ரேம், அதுமட்டுமின்றி ஒற்றுமையின்றி சிதறி கிடப்பதை காண முடிகின்றது. அப்படியிருந்தபோது ஈழமக்கள் தனிப்பிரதேசம் வேண்டுமென கூறுகின்றனர் என்பதை நாம் காணக்கூடியதாய்உள்ளது என்றுர்.

இவ்விழாவில் இந்திய கிளை உலகத் தமிழ்பண்பாடு இயக்க பொதுச்செயலாளர் டாக்டர் அரு. கோபாலன் பேசுகையில், மலையக மக்களின் குடியுரிமை பறிக்கப்பட்டபோது இதே நிலை மற்றைய தமிழ்பேசும் மக்களுக்கு வரக்கூடும் என நினைத்து அமரர் செல்வநாயகம் 1949-ம் ஆண்டு எதிர்த்தார்.

ஆனுல் இன்று மலையக மக்களுக்கு குடியுரிமையிருப்பின் 22பேரை தமது பிரதிநிதிகளாக பாராளுமன்றம் அனுப்பக்கூடிய வாய்ப்பு இருக்கும். வடக்கு-கிழக்கு பிரதேசத்தினை பொறுத்தவரை 18 பேரைத்தான் இங்குள்ளவர்கள் தமது பிரதிநிதிகளாக அனுப்பக்கூடிய நிலை உள்ளது.

மலையக மக்களின் பிரச்னைக்காக தமிழ்த் தலைவர்கள் என்ன முடிவு எடுத்தார்கள் இதுவரை நடந்தது என்ன என்பது நான் மலையகம் சென்றபோது அங்குள்ள இளைஞர்கள் என்னைக் கேட்டார்கள்.

எனவேதான் தமிழ்பேசும் தலைவர்களும், மக்களும் தமது பிரதேசத்தில் மட்டும் கவனம் கொள்ளாது ஈழம்வாழ் தமிழ் பேசும் மக்கள் அனைவரினதும் நலனுக்காக பாடுடவேண்டும்.

தமிழகத்திலே தமிழ்பேசும் முஸ்லிம்களுக்கு எவ்வித பாகுபாடும்

[7-ம் பக்கம் பார்க்க]

சிறந்த தமிழ் சினிமாப் படங்களை சென்னை தொலைக்காட்சியில் பார்க்க வேண்டுமா?
இதோ! ஒவ்வொரு கிழமையும் சிறந்த தமிழ்ப்படங்களை சென்னைத் தொலைக்காட்சியில் பார்த்து மகிழ்வதற்கு உத்தரவாதத்துடன் தொலைக்காட்சி ஏரியல் பொருத்திக்கொள்ள ஓடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.
வீனஸ் றெக்கோடிங் றேடியோ வாச் வேக்ஸ்
266/1, ஸ்ரான்லி வீதி, (ஸ்ரீதர் தியேட்டர் அருகாமையில்) யாழ்ப்பாணம்.

ஹரன் யாழ்.நகர்
தினசரி 5 காட்சிகள்
Clint Eastwood
EVERY WHICH WAY BUT LOOSE


# ரூ. 50 ஆயிரம் நகை திருட்டு

(யாழ்ப்பாணம்)

வீட்டிலிருந்தவர்கள் உறக்கத்திலிருந்தநேரம் பார்த்து உட்புகுந்த திருடர் கோஷ்டி சுமார் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான தாலிக்கொடி உட்பட 25 பவுண் நகைகள் சேலைகள், மின்சாரஉபகரணங்கள் ஆகியவற்றை திருடிச் சென்றுள்ளது.

கட்டுவன் தெற்கு ஏழாலை வடக்கைச் சேர்ந்த பாலச்சந்திரன் என்பவரின் வீட்டிலேயே இத் திருட்டுச்சம்பவம் நிகழ்ந்துள்ளது.

வீட்டு உரிமையாளர் பலாங்கொடையிலுள்ள தோட்டத்தில் சடமையாற்றுகின்றார். இவரின் மனைவியும் சகோதரியும் மற்றும் பிள்ளைகள் மூவரும் வீட்டிலுள்ள ஒரு அறையில் நித்திரையாயிருந்த நேரம் பார்த்து யன்னலை உடைத்து இறங்கிய திருடர்கள் பெட்டியிலும், சூட்கேசிலும் வைக்கப்பட்டிருந்த நகைகள் மற்றும் பொருட்களை அப்படியே எடுத்துச் சென்றனராம்.

சம்பவம் நடந்த அடுத்த நாள் காலை திருமதி பாக்கியம், வீட்டுக்கருகிலுள்ள தோட்டத்துக்குச் செல்லும் பொழுது பெட்டியும் சூட்கேசும் வெறுமனே கிடக்கக் கண்டு வீட்டுக்குச் சென்று பார்த்தபோது யன்னல் உடைத்து திருடப்பட்டது தெரியவந்தது.

சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொன். சுகுணேந்திரன் தலைமையிலான பொலிஸ் கோஷ்டியினர் விசாரணை செய்து வருகின்றனர். (மா)

## யாழ். மாவட்ட வேலைவாய்ப்பு: ஜூலை 31க்கு முன் சகலருக்கும் விண்ணப்ப படிவம்

யாழ்ப்பாணம்]

யாழ் மாவட்டத்தில்வதியும் மக்களுக்கான வேலைவாய்ப்புக்கள் இனி, யாழ் மாவட்ட அபிவிருத்திசபை மூலம் வழங்கப்படும். இதற்கானவிண்ணப்பப்படிவங்கள், அவ்வப்பகுதிகளிலுள்ள உதவி அரசாங்க அதிபர்கள் மூலம் இம்மாதம் 31ம் திகதி முதல் வழங்கப்படும். இவ் விண்ணப்பங்கள் ஜூலை மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் பூரணப்படுத்தி பதிவுத் தபால்மூலம் அவ்வப் பகுதி உதவி அரசாங்க அதிபருக்கு அனுப்பப்படுதல்வேண்டும்.

வேலைவாய்ப்புக்குறித்து சகல உதவிஅரசாங்க அதிபர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ள சுற்றுநிருபத்தில், விண்ணப்பப் படிவங்களுக்கு இரண்டு ரூபாவைச்செலுத்தி தமது வதிவிடத்திற்கான சான்றிதழ்களைக் காட்டி விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளமுடியும் என குறிப்பிடப்பட்டுள்ளது. ஒருவருக்கு ஒரு படிவம் வழங்கப்படும். (செ-இ)


றீகல் 29th — 30th தினசரி 5 காட்சிகள்
(யாழ்நகர்)
JIM BROWN in
I Escaped from the Devil's Island
11-6-82 முதல் ஸ்ரீதரின்: (Color)
மோகனப் புன்னகை



வெஸ்லி 3-6-82 வரை
(மானிப்பாய்) தினசரி 6-15, 9-15, சனி, ஞாயிறு 2-30
கமல் - ஸ்ரீபிரியா - நம்பியார்
நீயா?
[இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புதிய பிரதி]
(கலர்)


## புகையிலை விலை வீழ்ச்சி
### உற்பத்தியாளர்கள் கவலை

[பண்டத்தரிப்பு]

இம்முறை புகையிலைக் கன்றுகளின் விலை பெருமளவில் வீழ்ச்சியடைந்துள்ளதால் இப்பகுதியிலுள்ள புகையிலைச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தென்னிங்கையில் புகையிலை விற்பனையில் ஏற்பட்ட மந்த நிலையினால் புகையிலை வியாபாரிகள் தோட்டங்களுக்குள் சென்று புகையிலைக்கன்றுகளைக்கொள்வன செய்வதில் அக்கறை காட்டவில்லையாம் இதனால் தாம் கஷ்டப்பட்டு உற்பத்தி செய்த புகையிலைக் கன்றுகளை உரிய காலத்தில் நியாயமான விலையில் விற்க முடியாது இவர்கள் திண்டாடுகின்றனர் இப்பகுதியில் தொடர்ந்து பெய்து வரும் மழையினாலும் இந்தப் புகையிலைத் தோட்டங்கள் [illegible]க்கப்பட்டு வருவது இவர்களுக்கு மேலும் கவலையளித்துள்ளது. [அ]

## ஒருமாத அலவன்ஸ் நன்கொடை

[புலோலி]

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தை அமைப்பதற்கு பருத்தித்துறை நகராளுமன்ற சுயேட்சைக்குழு உறுப்பினர்களான திரு. மு. பொ, வீரவாகு, திரு சிவா கிருஷ்ணமூர்த்தி ஆகிய இருவரும் தமது ஒருமாத நகராளுமன்றப்படியை வழங்கவுள்ளனர். இதற்கான உறுதிமொழியை அவர்கள் பாடசாலை அபிவிருத்திச்சங்கத்திற்கு அளித்துள்ளனர்? [அ]


வெலிங்டன் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
லொறி ட்ரைவர் ராஜாக்கண்ணு
லிடோ தினசரி 4 காட்சிகள் (யாழ். நகர்)
எம்.ஜி.ஆர்-சரோஜாதேவி
பெற்றால்தான் பிள்ளையா
(புத்தம்புதிய பிரதி)



ஸ்ரீதர் தினசரி 4 காட்சிகள்
(யாழ். நகர்) கடைசி வாரம்
ரஜனிகாந்த்—ஸ்ரீபிரியா நடித்த
பொல்லாதவன்
(ஈஸ்ட்மன் கலர்)


## நாடு பிடிக்கும்

(6ம் பக்கத் தொடர்ச்சி)

இல்லை. அங்கு தமிழ்மொழிக்காக பல முஸ்லிம் அறிஞர்கள் குரல் எழுப்புகிறார்கள்.

ஒருமுறை சட்டமன்றத்தில் ஆட்சிமொழி எது என்ற பிரச்னை எழுந்தபோது தமிழ் பேசும் முஸ்லிம் ஒருவர் எமது தாய்மொழியே தமிழே ஆட்சி மொழியாகயிருக்கவேண்டும் என குரல் எழுப்பினர்.

ஆனல் ஈழத்திலே முஸ்லிம்களுக்கு பாகுபாடு உள்ளதை காண முடிந்தது. மக்களுக்குள் பிரிவினை இல்லாது தமிழ் உரிமை என்று கோரும் முஸ்லிம்களுக்கும் தாய்மொழி தமிழ் ஆகும். இவ்விடயத்தில் அமைப்பு ரீதியாக இயக்கம் கட்டப்படவேண்டும். ஈழ மக்களுடைய பிரச்னைகளை நேரில் கண்டறிவதற்காக நான் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, வவனியா, மலையகம் போன்ற இடங்களுக்கு விஜயம் செய்து அவதானித்தேன் என்றார்.

இவ்விழாவில் வவனியா அரச அதிபர் திரு. கே. சி. லோஸேஸ்வரன், காந்தீய அமைப்புச் செயலாளர் டாக் எஸ். இராசசுந்தரம், திரு. எம். எஸ். கந்தையா, திரு. இரா. சுப்பிரமணியம், திரு. மு. பாலசுப்பிரமணியம், திருத்தணிகை டாக்டர் [illegible] ஆகியோரும் உரையாற்றினர்.

காந்திய இயக்க பொருளாளர் திரு. க. நல்லதம்பி நன்றியுரை கூறினார்.

## இன்று பேராசிரியர் பேசுகின்றார்

[யாழ்ப்பாணம்]

மானிப்பாய் இந்து சமய விருத்திச்சங்க ஆதரவில் தமிழகத்தைச் சேர்ந்த மேலையூர் பூம்புகார் கல்லூரிப் பேராசிரியர் அருள்மொழிப்புலவர் திரு. த. அகரமுதல்வன் ''பெரும்பெயர் முருகன்'' என்னும் பொருள்பற்றி இன்று மாலை மானிப்பாய் இந்துக்கல்லூரியில் சொற்பொழிவாற்றுவார். (கு)

## இராமகிருஷ்ண மிஷன் புதிய அனாதைகள் இல்லம்

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன், ஸ்ரீசாரதா மகளிர் அனாதை இல்லத்திற்கென புதிய கட்டிடத்தினை அமைக்கவிருக்கின்றது.

இக்கட்டிடத்துக்கான அடிக்கல்லை ஸ்ரீமத்சுவாமி பிரேமதேமானந்தஜீ மஹாராஜ் எதிர் வரும் 2-ந் திகதி புதன்கிழமை காலை நாட்டிவைப்பார்.

புதிய அனாதைகள் இல்லக் கட்டிடடம் கல்லடி—உப்போடையிலுள்ள முந்திரிகைத் தோட்டத்தில் அமையவிருக்கின்றது. [கி]


ராணி தினசரி 4 காட்சிகள்
(யாழ். நகர்)
சிவாஜி-வாணிஸ்ரீ
உயர்ந்த மனிதன்



வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 5 காட்சிகள்
All that work; All that glitter;
All that pain; All that love; All that crazy;
Rhythm
All that Jazz
Roy Scheider, Jessica Lange, Ben Vereen
ALL THAT JAZZ
Directed by Bob Fosse—For Adults Only
No one under 18 yrs. admitted.


## வருடாந்தக் கூட்டங்கள்

[அரியாலை]

நல்லூர் பரிசுத்த யாக்கோபு ஆலயத்தின் வருடாந்தக்கூட்டமும் சுண்டிக்குளி பரிசுத்த யோவான் ஆலயத்தின் வருடாந்தக்கூட்டமும் இன்று ஞாயிறு காலை ஆராதனையின் பின்னர் நடைபெறவிருக்கின்றன. (௮)

## கல்விச் சுற்றுலா

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு மகாவித்தியலய உயர் வகுப்பு மாணவ மாணவிகள் கடந்த இரண்டு தினங்கள் வடபகுதிக்கு கல்விச் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டனர்.

மேற்படி வித்தியாலய ஆசிரியர் திரு. எஸ். சிவானந்தன் தலைமையிலான ஆசிரியர் குழு இச்சுற்றுலாவை வழிநடத்தியது.

27-ம், 28-ம் திகதிகளில் சுற்றுலாவை மேற்கொண்ட இந்த மாணவர்கள் வடபகுதியில் உள்ள பல முக்கிய இடங்களையும், ஆலயங்களையும், தொழிற்சாலைகளையும் பார்வையிட்டனர். (வண்-நிரு)

## யாருடையது?

தெல்லிப்பழையைச் சேர்ந்த திரு. இ. தளையசிங்கம் என்பவரால் கண்டெடுக்கப்பட்ட திறப்புக்கோர்வையொன்று ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது இத்திறப்புக்கோர்வை யாழ்ப்பாணம் — தெல்லிப்பழை வீதியில் அநாதரவாக காணப்பட்டது. உரியவர் அடையாளம் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம். (ஆ-ர்)


மனோகரா (யாழ்ப்பாணம்)
வெற்றி முரசுகொட்டும்
3-வது வாரம்
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
மாதர்கள் கூட்டம் அலைமோது நிறது
கார்த்திக் ராதா
தியாகராஜன் நடித்த
அலைகள் ஓய்வதில்லை
(கலர்)



ஹவுஸ் புல்... ஹவுஸ் புல்... ஹவுஸ் புல்...
10-30, 2-30, 6-15, 9-45
சாந்தி (யாழ்நகர்)
வெற்றிப்படம் 'குரு' தயாரிப்பாளர்களின் மற்றுமோர் வெற்றிப்படைப்பு!
2-வது ஜனத்திரள் வாரம்



தென்னகத்தில் மிகுந்த பரபரப்பூட்டி காட்சியளித்த விறுவிறுப்பு மிகு வண்ணத்திரையோவியம்
கமல் (இருவேடங்கள்)
சுஜாதா, சுமன், தேங்காய், நாகேஷ்.
கடல் மீன்கள்
தவிர்க்கமுடியாத காரணங்களால் காட்சிகள் முன்கூட்டியே ஆரம்பிக்கப்படுவதால் ஆசனங்கட்கு முந்துங்கள்



ராஜா
[யாழ்ப்பாணம்]
தினசரி 4காட்சிகள்
கொட்டகை நிறைந்த காட்சிகளாக
ரஜனிகாந்
சுஜாதா
விஜயன்
கராத்தே மணி
ரதி



அன்புக்கு நான் அடிமை
[ஈஸ்மன் கலர்]

வறுமைக் குடும்பம்:

# கணவன் ஏசியதால் மனைவி தற்கொலை

(மாவிட்டபுரம்

சமையல் செய்யாமல் இருந்த மனைவியைக் கணவன் ஏசியது விபரீதமாகியது 2பிள்ளைகளின் தாயாரான அவர் நஞ்சருந்தித் தற்கொலை செய்து கொண்டார். அச்சுவேலியைச் சேர்ந்த சுப்பிரமணியம் இராசமணி 44 வயது) என்பவரே தற்கொலை செய்து கொண்டவராவார்.

இம்மரணம் குறித்து திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. நா. தம்பிராஜா விசாரணை நடத்தினர்.

காலமானவரின் கணவர் சந்தையா சுப்பிரமணியம் சாட்சியமளிக்கையில் கூறியதாவது;

கடந்த 25 வருடங்களாக நானும் காலமானவரும் குடும்பம் நடத்தி வந்தோம். 2 பிள்ளைகளும் எமக்கு உண்டு. வருமானம் குறைவாக இருந்ததால் குடும்பத்தில் வறுமை நிலவியது நான் மது அருந்துவதும் உண்டு. அதுவும் மனைவிக்குப்பிடிப்பதில்லை. சம்பவதினம் வெளியில், சென்றுவிட்டு வந்தபோது வீட்டில் சமையல் செய்யப்படவில்லை. காலமானவரிடம் விசாரித்தபோது சமையலுக்குச் சமான்கள் இல்லை என்று கூறினர். 'நான் சாமான்கள்வாங்கி வருகிறேன்; சமையலுக்கு ஆயத்தப்படுத்து' என்று கூறிவிட்டுச் சென்ற நான், சாமான்களுடன் திரும்பி வந்தபோதும் சமையலுக்கு ஆயுத்தம் செய்யாமையால் காலமானவரை ஏசினேன். வாக்குவாதம்மூண்டதையடுத்து அவர் வீட்டிலிருந்த நஞ்சை எடுத்து அருந்திஞர்''.

தற்கொலை எனத் தீர்ப்பு அளிக்கப்பட்டது.

காங்கேசன்துறை பொலிஸ் கான்ஸ்டபிள் நா.யோகராஜா சாட்சிகளை ஆஜர் செய்தார். (அ)


## சுபிட்சத்திற்கு வழிகாட்டி

தங்கள் முதலீட்டிற்கு
இதோ ஒரு பொன்ஞன வாய்ப்பு

நம்பிக்கை - நாணயம் - அநுபவம்

**SHABRA UNICO FINANCE LIMITED**

[இலங்கை மத்திய வங்கியின் அனுமதிபெற்ற ஸ்தாபனம்]

விபரங்களுக்கு:-

61, நியூ புல்லர்ஸ் வீதி,
கொழும்பு-4

Tele:- 589310



## தேவை

நெல்லியடியிலுள்ள எங்கள் தயாரிப்புத் தொழிற்சாலைக்கு பின்வரும் துறைகளில் திறமையும் அனுபவமும் வாய்ந்த தொழிலாளர்கள் உடனடியாக தேவை.

1. கடைச்சல் இயந்திர இயக்குனர் (Lathe Operators)
2. ஓட்டுனர் (Welders)
3. பொருத்துனர் (Fitters)

தகுதியுள்ளவர்கள், பருத்தித்துறை வீதி நெல்லியடியில் உள்ள எங்கள் தொழிற்சாலைக்கு நேரில் வரவும். சம்பளம் தகுதி அடிப்படையில் பேச்சுவார்த்தை மூலம் தீர்மானிக்கப்படும்.

எங்கள் தொழிற்சாலைக்கு வேலைபயிலுனராக சேர விரும்புபவர்களிடம் இருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் 18 வயதிற்கு குறையாதவர்களாயும் G. C. E. [/ol] பரீட்சையில் சித்தியடைந்தவர்களாயும் இருத்தல் வேண்டும்.

தகுதியுள்ளவர்கள் எங்கள் தொழிற்சாலைக்கு அத்தாட்சிப் பத்திரங்களுடன் நேரில் வரவும்.

PAALAN

**A. C. பாலன்**

பூட்டு, பெட்டக பொறியியலாளர்களும் தயாரிப்பாளர்களும்,

550, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.


## ஜனதிபதிக்கு தந்தி

[கொழும்பு]

இலங்கை வர்த்தக ஊழியர் சங்கம் யாழ். பல்கலைக்கழக மாணவன் விமலராசாவை விடுதலை செய்யும்படி கோரி ஜனதிபதிக்கு தந்தியொன்றை அனுப்பிவைத்துள்ளது.

அத்தந்தியில் யாழ். பல்லைக்கழக மாணவன் விமலராசா உடனடியாக விடுதலை செய்யப்படவேண்டுமென கேட்கப்பட்டிருப்பதுடன் பயங்கரவாத விசேட தடைச்சட்டத்தை ரத்துச் செய்யும்படியும் குறிப்பிடப்பட்டுள்ளது. [கி]

## நீதிபதி ஜமீலுக்கு இன்று பிரியாவிடை

(யாழ்ப்பாணம்)

யாழ் மேல் நீதிமன்ற நீதிபதி ஜனப் எம். ஜமீல் இடமாற்றம்பெற்றுச் செல்வதை முன்னிட்டு யாழ் மேல் நீதிமன்ற கட்டிடத்தில் யாழ் சட்டத்தரணிகள் சங்கத்தினர் பிரியாவிடை விருந்துபசார வைபவம் ஒன்றை இன்று நண்பகல் நடாத்தவுள்ளனர்.

விருந்துபசாரத்துக்கு முன்பு காலை 8-30க்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் சட்டத்தரணிகளிடையே கிரிக்கட் போட்டி ஒன்று நடைபெறவுள்ளது.

யாழ் சட்டத்தரணிகள் கோஷ்டி யாழ் மேல்நீதிமன்ற நீதிபதி ஜனப் எம். ஜமீல் தலைமையிலும், மல்லாகம் மாவட்ட நீதிமன்ற சட்டத்தரணிகள் கோஷ்டி மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிபதி சி. வி. விக்னேஸ்வரன் தலைமையிலும் இக் கிரிக்கட் போட்டியில் மோதும். (மா]

## விசேட சொற்பொழிவும் பஜனையும்

[யாழ்ப்பாணம்]

மலேஷிய கைத்தொழில் அபிவிருத்திச்சபை இயக்குநரும் சத்தியசாயிபாபா பற்றி மூன்று நூல்களை எழுதியவரும் பகவானின் 55வது பிறந்த தினவிழாவையொட்டி பிரசுரிக்கப்பட்ட 'பொற்காலம்' என்ற நூலில் விசேட கட்டுரை எழுதியவருமான ஸ்ரீ ஜே. ஜெகதீசன் இன்று யாழ்ப்பாணத்தில் இரண்டு இடங்களில் விசேட சொற்பொழிவும் பஜனையும் நடத்துகிறர்.

மாலை 4 மணியளவில் திருநெல்வேலி ராமநாதன் வீதியிலுள்ள யாழ் பகவான் ஸ்ரீசத்திய சாயிபாபா சமிதி மண்டபத்திலும் மாலை ஆறு மணியளவில் யாழ். ரசிக ரஞ்சனசபா மண்டபத்திலும் சொற்பொழிவு இடம்பெறும். [இ]

## தொண்டையில் மீன் முள்ளு சிக்கி பாலகன் பலி

[மன்னர்))

மன்னர் சாவற்கட்டு வட்டாரத்தைச் சேர்ந்த எஸ். அமலநாதன் என்ற ஐந்து வயதுப் பாலகன் மீன் முள்ளு தொண்டையில் சிக்கியதால் மூச்சுத்திணறி பரிதாபமாகப் பலியானன். திரைப்படம் ஒன்று பார்த்துவிட்டு வந்து பெற்றேருடன் உணவருந்திய போது மீன்முள்ளுச்சிக்கியதாகவும், உடன் வைத்திய சிகிச்சைக்கு உட்படுத்தியதாகவும், விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது.

## இரகசியம்..

[-1ம் பக்கத் தொடர்ச்சி]

தானித்து கொடுக்கல் வாங்கல் செய்யுமாறும் வங்கி உயர் அதிகாரி ஒருவர் பொதுமக்களுக்கு ஆலோசனை தெரிவித்துள்ளார். (இ)

## சுங்க...

1ம் பக்கத் தொடர்ச்சி)

அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

எச். பி. செனவிரத்ன, (வயது 29) கே. ஏ. சுனில், (வயது 28), டபிள்யூ ஏ. சந்திரதாச [வயது 29) ஹென்றி பீட்டர் பியசேன [வயது 29) ஜோன் ஹென்றி கொடிகார (வயது 27 ஆகிய சுங்கப் பகுதி அதிகாரிகளும் மண்டைதீவைச் சேர்ந்த ஆர். அருந்தவநாதன் வயது25), லோறன்ஸ்அலெக்சாண்டர் வயது 27) லோறன்ஸ் பரியான் (வயது 24) சிவானர்தன் [வயது 28) ஆகியோரே யாழ ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மண்டைதீவிலிருந்து பொற்கொல்லர் ஒருவர் உட்பட ஒருகோஷ்டியினர் திருமணத்தையொட்டிப் பொன்னுருக்கும் விஷயமாக யாழ். நகருக்குக் வானில் வந்தாகவும் தகவலொன்வையடுத்துச் சுங்கப்பகுதியினர் அவர்களை மறித்துச் சோதனை செய்தபோது சில பொருட்கள் சிக்கியதாகவும் இதை அடுத்து வானில் வந்தவர்கள் சுங்கப் பகுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டு விசாரணை செய்யப்பட்டதாகவும் சிறிது நேரத்தில் சுங்க அலுவலகத்திற்கு ஒரு கோஷ்டியினர் வந்தபோது அங்கே மோதல் இடம்பெற்றதாகவும் சுங்க அலுவலகமும் இதனல் சேதமடைந்ததாகவும் தெரிய வருகிறது.

சம்பந்தப்பட்ட வான் சுங்கப் பகுதியினல் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. [மா]

## மரண அறிவித்தல்

### கந்தையா தம்பிரட்ணம்

கந்தையா தம்பிரட்ணம் [யாழ் நீதிமன்றம்] காலமானர் இவர் காலஞ்சென்ற குருநாதர் கந்தையா திருமதி நவநீதம் கந்தையாவின் அன்பு மகனும், ஜெயரட்ணம், யோகரட்ணம், இராசரட்ணம் [மின்சார ஒப்பந்தக்காரர்], பிலோமினு, நவரட்ணம் [யாழ் மாநகரசபை], ஸ்ரெல்லாயூயின், அவர்களின் அன்புச் சகோதரனுமாவார். அன்னரின் பூதவுடல். நல்லடக்கத்திற்காக இன்று [30-5-82] மாலை 4-00 மணிக்கு யாழ் கதீட்றல் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இத்தவலை உற்ருர், உறவினர், நண்பர்கள் தயவு செய்து ஏற்றுக்கொள்ளவும்.

நவநீதம், இராஜரட்ணம்.

46, பண்டியன்தாழ்வு,
யாழ்ப்பாணம் 3388

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை ஐயம்பிள்ளை

நெடுந்தீவு மேற்கைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை ஐயம்பிள்ளை காலமாகிவிட்டார். இவர் வள்ளியம்மையின் அன்புக் கணவரும் ஆறுமுகம். யாழ்நகர் பிரபல வர்த்தகர் ஐ. சின்னத்துரை அன் சன்ஸ் சோமசுந்தரம், தெய்வானைப்பிள்ளை, சின்னம்மா ஆகியோரின் அன்புத்தந்தையும், ஏகாம்பரம், பொன்னுத்துரை, லக்சுமி, கண்மணி, சின்னம்மா ஆகியோரின் மாமனரும் ஆவார். அன்னரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக 30-5-82 (இன்று) ஞாயிறு மாலை 4 மணிக்கு ஈச்சமோட்டை வீதியில் 74ம் இலக்க இல்லத்திலிருந்து துண்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

3387


## பகிரங்க ஏலவிற்பனை

நல்லநிலையிலுள்ள மூன்று லொறிகள் விற்பனைக்குள்ளன.
லொறிகளை நேரில்பார்வையிட்டு விலைவிபரங்களை அறிந்துகொள்ளலாம்.

27 SRI 2098 IZUZU
22 SRI 681 MORRIS
22 SRI 5615 MORRIS

மகாராஜா இன்வெஸ்ட்மென்ட் லிமிட்,
122, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 8267


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1982 ஹு மே மீ 30-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number Q.B. 100236/81.
Eelanadu—P. O. Box 49, Telegram: 'Eelanadu' T'phone: 389 and 8126.